
# தமிழரசு

16.2.1996 ரூ.3







# இந்த இதழில்...


★ தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை: ................ 2

★ 'தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்' - மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ................................................ 7

★ 'பெரும்பிடுகு முத்தரையரின் பெயரும் புகழும் சாகாவரம் பெற்றுவிட்டன' - மாண்புமிகு முதல்வர் அவர்களின் புகழ்மாலை ...................... 13

★ "அண்ணல் அம்பேத்கருக்கு ரூ.5 கோடி மதிப்பில் மணிமண்டபம்" மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ........ 17

★ காவிரி நதிநீர்ப் பிரச்சினை: அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை .......................... 24


இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. (36)

★ இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027


மாசித் திங்கள் : 4

மலர்: 26

இதழ்: 16

16.2.1996

விலை: ரூபாய் 3



# வளர்ச்சித் திட்டங்களைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறது!

தமிழ்நாட்டு ஆளுநர்

டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே !

1996 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில்,நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இது, தமிழ் நாடு 10 ஆம் சட்டப் பேரவையின் கடைசி கூட்டத்தொடராகும், இவ்வரசு அதன் ஐந்தாண்டுப் பதவிக் காலத்தை முழுமையாக முடிக்கவுள்ளது ஐந்தாண்டுக் காலத்தைப் பின்நோக்கிப் பார்த்தோமானால், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ளதை நாம் காணலாம். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுத் திட்ட ஒதுக்கீடுகள் ஒவ்வோராண்டும் விஞ்சப்பட்டு வந்துள்ளன. ஏழை எளியோர்க்கு விரிவான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம்உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்ற சட்டம்-ஒழுங்கு நிலைமை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறந்த சாதனையை எண்ணி நாம் பெருமிதம் கொள்ளலாம். இம்மாநிலம் எதிர்காலத்திலும் இத்தகைய முன்னேற்றத்தைத் தொடர்ந்து பெற்றுவரும் என நான் நம்புகிறேன்.

3. இவ்வரசு பதவி ஏற்றபோது மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட இடர்பாடான நிலைமையை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் நினைவுகூர்வர். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகள் ஆகியோரால் உருவான அபாயம் உறுதியாக ஒருமித்த முறையில் சமாளிக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற ஒரு சில வாரங்களுக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து எழுந்த வன்முறைச் சம்பவங்களால் நாடு முழுவதும் பதட்டமடைந்த போது, தமிழ்நாடு மத இணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. வெடிமருந்துகளைப் பயன்படுத்தி கொடிய நோக்கங்களை எய்த இடதுசாரி தீவிரவாதிகளும், சமய அடிப்படைவாதிகளும் மேற்கொண்ட முயற்சிகள் உறுதியான தடுப்பு நடவடிக்கைகளால் தடுத்து நிறுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் ஏற்பட்ட பல்வேறு வெடிகுண்டு விபத்து சம்பவங்கள் குறித்துப் புலனாய்வு செய்ய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து, வெடிகுண்டுச் சம்பவங்கள் தடுக்கப்பட்டன. தென் மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைக் கலவரச் சம்பவங்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இப்பகுதிக்குச் சென்று நேரடியாக தலையிட்டதால், பொதுமக்களிடத்தில் நம்பிக்கை உணர்வு தோற்றுவிக்கப்பட்டதுடன், அங்குள்ள அதிகாரிகள் உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்தது. இந்நடவடிக்கைகளினால் தென் மாவட்டங்களில் மீண்டும் அமைதி திரும்பியது.

4. இவ்வரசு கடந்த ஐந்தாண்டுக் கால அளவில் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால், மாநிலக் காவல்துறை, புதிய நோக்கும், வழிகாட்டுதலும் பெற்று, நவீனமயமாக்கப்பட்ட, தொழில் சிறப்புப் பெற்ற, மனிதாபிமானத்துடன் செயல்படும் படையாக மாற்றப்பட்டுள்ளது. காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், படைக்கலங்கள், காவல் துறையின் புலனாய்வுக்கும், தகவல்களைப் பெறுதலுக்கும் உரிய வசதிகள் ஆகியவற்றுடன் காவல் படையை நவீனமயமாக்க

**ஏழை எளியோர்க்கு விரிவான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடித் தளமாக அமைகின்ற சட்டம்-ஒழுங்கு நிலைமை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.**

மொத்தம் ரூ.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனமயமாக்க மாநில அரசின் தேவை ரூ.80.45 கோடியாயிருக்க, இந்திய அரசு ரூ.10 கோடி மட்டுமே வழங்கியுள்ளது. இதனால் தடைபடாமல், மாநில அரசு, தன்னுடைய சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து போதிய நிதியை ஒதுக்கியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 1172 காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் தற்போது மோட்டார் வண்டி, தொலைபேசி வசதி, கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதன வசதிகள் ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் காவல் பணியை மேம்படுத்தும் நோக்குடன், 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட காவலர்களையும், சாதனங்களையும் கொண்டு, முதற்கட்டமாக புறநகர்ப் பகுதிகளில் உள்ள 5 காவல் நிலையங்கள் சென்னை, காவல்துறை ஆணையரின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டில் 68,638 ஆக இருந்த காவல் படையினரின் மொத்த எண்ணிக்கை, 1996 ஆம் ஆண்டில் 78,428 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க இம்மாநிலத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்கியதில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னோடியாகத் திகழ்வதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த முயற்சியை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளதுடன், உலக நாடுகள் அளவிலும் பரந்த அளவில் பாராட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் தற்போது முழு அளவில் செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் புது வாழ்வு அளிக்க, பாதிக்கப்பட்டோர் நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. காவல் துறையில் ஒழுங்குணர்வைப் பேணிக் காப்பதற்காகத் தொகுதிக் காப்புறுதித் திட்டங்கள், சுகாதார நல நிதித் திட்டம், குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம், வீட்டுவசதித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட காவல் துறையினருக்காக நலத் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவல்துறையின் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தரமான பயிற்சியளிப்பதற்காக, வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று ரூ.20 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகிறது.

5. "நீதி காலதாமதப்படுகிறது எனில் நீதி மறுக்கப்படுகிறது" என்பதை முழுமையாக உணர்ந்து வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக புதிய நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. 44 குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. சென்னையில் 3 நீதி மன்றங்களும், மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒரு நீதிமன்றம் வீதம், ஆக 6 குடும்ப நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், 5 நீதிமன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாக உள்ளனர். கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு நீதிமன்றமும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில்

புதிதாக 3 நீதிமன்றங்களும் உட்பட புதிதாக 4 தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக 9 சார்நீதிமன்றங்கள், கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட புதிதாக 7 உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றை அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 1991-92லிருந்து மொத்தம் 84 நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது, நாடு விடுதலை பெற்றதிலிருந்து நடைபெறாத ஒன்றாகும். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள், கூடுதல் செசன்சு நீதிமன்றங்களாக நிலை உயர்த்தப்பட்டு, அவை மனித உரிமைகள் நீதிமன்றங்களாகப் பெயரிடப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் வழக்குகளை விரைவாக முடிக்க வழிவகை செய்ய பல்வேறு சிவில் நீதிமன்றங்களின் பணவகையிலான அதிகார வரம்புகளை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை, நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும், 1993-94 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் ரூ.35.17 கோடி செலவில் 80 திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக அரசு வழக்கு இயக்ககம் ஒன்றும், குற்ற வழக்கு இயக்ககம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. வழக்குரைஞர்கள் நல நிதியின் கீழ் வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, வழக்குரைஞர் இறந்துவிடும் நேர்வில் ரூ.1 இலட்சமும் ஓய்வு பெறும் போது ரூ.50,000/-ம் வழங்க கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.


6. தமிழ்நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின் போது சாதாரணமாகப் பெய்யும் மழை அளவு 461 மி.மீட்டராக இருக்க, 1995 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 259 மி.மீட்டர் மட்டுமே ஆகும். இது 44 சதவீதம் குறைவாகும். சிதம்பரனார், கன்னியாகுமரி, இராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர்-தீரன் சின்னமலை கவுண்டர், பெரம்பலூர்-திருவள்ளுவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய 15 மாவட்டங்களை, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று அரசு அறிவித்துள்ளது. மேலும், தென் ஆர்க்காடு-வள்ளலார், சேலம், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 10 வட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாடு, ஊரக வேலை வாய்ப்பின்மை, கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் தண்ணீர் இல்லாமை ஆகிய நிலையைச் சமாளிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல், ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தல், ஏனைய துயர்தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான செலவுக்கு முதற்கண் ரூ.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், மொத்தம் 3753 துளைக் கிணறுகள் அமைப்பதற்காகும் தொகையான ரூ.26.94 கோடியும் அடங்கும். இராமநாதபுரம் மாவட்டத்தில் நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 45 தளவாடங்களை மொத்தம் ரூ.65 கோடி செலவில் அமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதற்காகும் செலவில் 75 சதவீதத்தை வழங்கும் என்று முதற்கண் உறுதி அளித்திருந்தபோதிலும், ஏற்கெனவே அளித்துள்ள ரூ.10.75 கோடியோடு தன் உதவித் தொகையை நிறுத்திக் கொண்டுள்ளது; எஞ்சியுள்ள செலவைத் தற்போது மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. மேலும், நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 155 சிறு தளவாடங்களை மொத்தம்

ரூ.28.33 கோடி செலவில் அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1996 ஜனவரி 27 ஆம் நாளன்று இராமநாதபுரத்தில் வறட்சி நிலையினை நேரடி ஆய்வு செய்து ரூ.266 கோடி செலவிலான துயர் தணிப்புத் திட்டத்தை அறிவித்தார். இதில், குடிநீர் வழங்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுவதற்காகும் கூடுதல் நிதி ரூ.72 கோடி அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுவதற்காக, ரூ.35 கோடி ஒதுக்கப்படும். ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த ரூ.85 கோடி செலவாகும். குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்காக திண்டுக்கல்–அண்ணா மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளுக்கு ரூ.5 கோடி மானியம் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றத் துயர்தணிப்பு தேசிய நிதியிலிருந்து மொத்தம் ரூ.630 கோடி நிதியுதவி கோரும் வறட்சி நிலை விவர அறிக்கை ஒன்றை மாநில அரசு தயாரித்து வருகிறது. இதுவரை ஏற்பட்டிராத வறட்சி நிலையைச் சந்திக்க, போதிய நிதிஉதவி அளித்து இம்மாநிலத்திற்கு உதவுமாறு, தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும்.

7. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததையடுத்து ஏற்பட்ட வறட்சி நிலைமை, தமிழ்நாட்டிற்கு விடவேண்டிய நீரை கருநாடக அரசு விடத் தவறியதால் மேலும் மோசமடைந்துள்ளது. இந்த நீர், இந்திய அரசின் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளிட்ட அரசிதழ் தனி அறிவிப்பில் வெளியிடப்பட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையின் படி விட வேண்டியதாகும். கருநாடக அரசு, முந்தைய ஆண்டுகளில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல் படுத்தவில்லை என்ற போதிலும், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குப் போதிய அளவுக்கு நீர் வரப் பெறுவதற்கு இயற்கை தாராளமாக உதவியது. 1995–ல் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், வாடும் பயிர்களைக் காப்பாற்ற இடைக்கால ஆணையின்படி நீர் விடுவதற்குக் கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதி மன்றத்தையும் காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர் மன்றத்தையும் தமிழ்நாடு அணுக வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இது தொடர்பாகத் தலையிட்டுத் தமிழ்நாட்டிற்கு உடனடியாக 11 டி.எம்.சி. நீர் விட 19–12–1995 ஆம் நாளிட்ட நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த அணுகுமுறை ஒன்றை உருவாக்க மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டது உட்பட அடுத்தடுத்து ஏற்பட்ட நிலவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றம் வரையறுத்த மாதாந்திர அளவுடன், நாளொன்றுக்கு 1 டி.எம்.சி. என்ற வீதத்தில் 6 டி.எம்.சி. நீரைத் தற்காலிகமாக விடுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கருநாடக அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும், வாடும் பயிர்களின் நிலைமையை நேரடியாகக் கண்டு ஆய்வு செய்யவும், தண்ணீர்த் தேவை குறித்து ஆராயவும் வல்லுநர் குழு ஒன்றையும் நியமித்தார். தமிழ்நாட்டிற்கு 11 டி.எம்.சி. நீரை விட வேண்டுமென்கிற நடுவர் மன்றத்தின் ஆணையில் எந்த மாற்றத்தையும் செய்ய உச்ச நீதி மன்றம் கருதவில்லை. மேலும், சட்டப்படி அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் இரு மாநிலங்களிலும் தற்போதுள்ள வாடும் பயிர்கள், தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பின்னர் தண்ணீரைத் திறந்துவிடுவது பற்றி ஏற்கெனவே ஆராய்ந்துள்ளதால், இதற்கென்று தனியாக "வல்லுநர் குழு" ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்ட பின்னர், இம்மாநிலத்திற்கு எஞ்சிய 5 டி.எம்.சி. நீரைப் பின்னர் பெற்றுத்தர மாண்புமிகு பாரதப் பிரதமர்

**(தொடர்ச்சி 30-ஆம் பக்கம் பார்க்க)**

## அட்டை சொல்லும் செய்தி:




# “தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்”

### –மாண்புமிகு முதல்வர் உரை

“**பொது** வாழ்வில் எனது பணி ஓரளவே இருந்தாலும், அமெரிக்க மக்கள் என்னைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கிடுவதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சமுதாயத்தில் பொதுத் தொண்டு ஆற்ற வேண்டும் என்ற உணர்வு தமிழ்நாட்டில் பெண்கள், குழந்தைகள் நலனுக்காக நான் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அவர்களின் வாழ்வை நேரில் கண்ட பிறகு ஏற்பட்டதாகும். வரதட்சணை சாவு, சிசுக் கொலை போன்ற இங்குள்ள சமுதாயக் கேடுகளைப் போல மேல்நாடுகளில் மனைவியை அடிப்பது, குழந்தைகளைத் துன்புறுத்துவது முதலியவை உள்ளன. ஆக, பெண்கள், உலகம் முழுவதும் கொடுமைப் படுத்தப்பட்டு வருவது இக்காலத்தில் துயரமான ஒரு சம்பவமாகும். பணக்கார நாடா, ஏழை நாடா, மக்கள் கருப்பா வெள்ளையா, என்பது இதற்கு விதி விலக்கு அல்ல.

தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுப் பழக்கமான பெண் சிசுவைக் கொலை செய்வதைத் தடுத்திடக் குழந்தை நலனுக்காக நான் 15 அம்சத் திட்டங்களைத் தொடங்கி




வைத்தேன். இதில் ஒரு சிறப்பான அம்சம், தொட்டில் குழந்தைத் திட்டம். குழந்தைகளுக்குச் சத்துணவு , உடை, கல்வி வசதி கிடைக்க இந்தத் திட்டம் உதவுகிறது. தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம், பெண் குழந்தைகளுக்குச் சமுதாயத்தில் நல்வாழ்வு கிடைக்க வழி செய்யும் விழிப் புணர்வு உருவாகியது.

அமெரிக்காவில் விஸ்கான்சின் வெஸ்ட் பென்ட் பிரண்ட்சிப் கார்டன் மற்றும் சிகாகோவில் தேவான் அவின்யூவில் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு எனது பெயர் சூட்டப்பட இருப்பதாகத் தெரிவித்தனர். இதற்காகச் சர்வதேச அமெரிக்க நட்புறவுச் சங்கத்துக்கும், சிகாகோ நகர மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்காவில் உள்ள 2 நகரங்கள் எனது பெயர் தாங்கி நிற்க இருப்பது அமெரிக்க மக்களின் நட்புறவைக் காட்டுகிறது. உள்ளபடியே இதுவேறு யாருக்கும் வழங்கப்படாத மரியாதையாகும். அமெரிக்க மக்கள் எனக்கு வழங்கிய அமைதி விருதைப் பெற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நெருங்கிய நட்புறவு மேலும் வளரும் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

இலண்டனில் உள்ள மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மைகள்



# சிறப்புக்குச் சிறப்பு செய்யும் சில சிறப்புகள்

☆ இலண்டன் மாநகரில் உள்ள உலகப் புகழ்பெற்ற மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மை காட்சியகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் மெழுகு உருவக் சிலை இடம் பெறும்.

☆ அமெரிக்க விஸ்கான்சின் மாநிலத்திலுள்ள நட்புத் தோட்டத் திற்கு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப்படும்.

☆ மாண்புமிகு முதல்வர் அவர் களின் 48-வது பிறந்தநாள் இனிமேல் உலகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப் படும்.

☆ முதல்வர் அவர்களின் பிறந்த நாள் 48 நாடுகளில் சிறப்பாகக் கொண்டாடப்படும். அவ் விழாவைத் தொடங்கி வைக்க அமெரிக்க முதல் பெண்மணி திருமதி ஹிலாரி கிளிண்டன் கலந்து கொள்வார்.

☆ ஆகஸ்டு 1996-இல் அமெரிக் காவில் நடக்கும் தேசிய குடியரசுக் கட்சி மாநாட்டிற்கு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்.

☆ சிகாகோவில் உள்ள தேவான் அவென்யூ என்ற பகுதிக்கு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப் படும்.

☆ அமெரிக்கப் பழங்குடியினரின் சார்பாக செவ்விந்திய மொழியில் 'MAA-STHA-MA-NI-GA' (வீர நடைபோடும் வீராங்கனை) என்ற பட்டம் சூட்டப்பட்டது.

☆ 1995-ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண்மணி விருது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கண்காட்சியில் எனது உருவ பொம்மை வைப்பதற்கு முடிவு செய்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்தக் கண்காட்சி யில் உலகச் சிறப்பு வாய்ந்த தலைவர்களின் உருவ பொம்மைகள் வைக்கப் பட்டுள்ள இடத்தில் எனது உருவமும் இடம் பெறுவது வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது.

சினிமா உலகில் எனது வாழ்க்கையைத் தொடங்கிய தால், "மேடம் டுசாட்ஸ் கண் காட்சி" எனக்குப் புதியதல்ல. உண்மையில் சொல்லப் போனால் பொது வாழ்க்கையில் மிகவும் உறுதியாகச் செயல்படும் நான் உறுதியான மனம் படைத் தவள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருது வழங்கியதன் மூலம் அளிக்கப் பட்ட கௌரவத்தை ஏற்றுக் கொள்வதுடன் இந்தக் கௌர வத்துக்கு என்னைத் தேர்ந்து எடுத்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொருத்தவரை மக்களுக்குச் சேவை செய்வது தான் எனது குறிக்கோள் ஆகும்.

இந்த விருதை வழங்கிய உலகத் தமிழ் இளைஞர் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் விஜய் பிரபாகர், அமெரிக்காவில் தமிழ் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தி வருபவர். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மகிழ்ச்சியான சந்தர்ப் பத்தில் எனது அன்பான தாயார் இங்கு இல்லையே என்று எண்ணி வருந்துகிறேன். ஆனால், என் மீது அன்பு செலுத்துகிற இலட்சக்கணக்கான மக்கள் என்னைத் தாயாகக் கருதி என்னை 'அம்மா' என்று அழைப் பதை எண்ணி ஆறுதல் அடை கிறேன். எனக்கு அளிக்கப்பட்ட அனைத்து கௌரவத்தையும் என் அன்பான மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

பெண்கள் உரிமைக்காகவும், நமது குழந்தைகளின் ஒளி மயமான வருங்காலத்திற்காகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க் கைக்காகவும், சாதியற்ற சமுதாயம் அமையவும் மேலும், தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்.

எனக்கு முன்னால் உள்ள கடமைகள் என்ன என்பதை நான் நன்கு அறிவேன். நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி சொன்னதைப் போல ஒருவர் என்ன செய்து இருக்கிறார் என்று பார்க்கப்படுவதில்லை. அவர் இன்னும் என்ன செய்ய வேண்டியிருக்கிறது என்று தான் பார்க்கிறார்கள். பொது வாழ்க்கையில் நான் எவ்வளவு காலம் இருக்கிறேனோ, அது வரை நான் செய்து முடிக்க வேண்டிய எனது பணிகளை நிறைவேற்றத் தொடர்ந்து பாடுபடுவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.




# புவியெங்கும் புகழ் விளங்கும் புரட்சித்தலைவிக்குப் புகழாரம்

தமிழக வரலாற்றில் இது வரை எந்த முதலமைச்சருக்கும் கிடைத்திராத விருதும் பாராட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அமெரிக்க நாட்டினரால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு ஏற்கெனவே அவருடைய ஆளுமைத் திறனுக்கும், செயலாக்கத்திற்கும் பாராட்டுகள் பல கிடைத்திருந் தாலும், அவற்றுள் அண்டை மாநிலமான கேரள மாநிலத் திலிருந்து வழங்கப்பட்ட ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரியா விருது குறிப்பிடத்தக்கது.

தற்போது அமெரிக்க மக்களால் வழங்கப்படும் 1995ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் மணி விருது அனைவராலும் பாராட்டப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களால் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் தொட்டில் குழந்தைகள் திட்டம், குழந்தைகளுக்கான 15 அம்ச சிறப்புத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் போன்றவைகளைப் பாராட்டி அமெரிக்காவிலுள்ள உலகத் தமிழ் இளைஞர்கள் கூட்ட மைப்பு நிறுவனம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 2.2.96 அன்று கலைவாணர் அரங்கில் சிறந்த பெண்மணி விருது வழங்கும் விழா எடுத்துச் சிறப்பித்தது.

விழாத் தொடக்கமே புதுமையாக இருந்தது. தமிழ்த் தாய் வாழ்த்தைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டுப் பண் ஒலித்தது. அமெரிக்க சர்வதேச வளர்ச்சி அமைப்பின் தலைவர் டாக்டர் லூயிஸ் மித்ரா வரவேற்புரையாற்ற — விழா தொடங்கியது. உரைக்குப்பின் பன்னாட்டுக் கொடிகள் நிரம்பிய கூடையை முதல்வர் அவர்களுக்கு வழங்கினார். பின்னர் இல்லினாய்ஸ் மாநில செனட்டர் ஹவார்டு கரோல் குத்துவிளக்கேற்றித் தொடக்க வுரையாற்றினார்.



அவர் பேசுகையில், குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பல நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இதுபோன்ற சீரிய திட்டங்களால் இந்திய நாட்டுக்கே வழிகாட்டு கிறார். பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சதவிகித ஒதுக்கீடு, கல்வியில் முன்னுரிமை போன்றவை இவர் செய்துள்ள சாதனைகளில் குறிப்பிடத் தக்கவை என்று பாராட்டினார். வரும் ஆகஸ்டு மாதம் அமெரிக்காவில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கட்சி மாநாட்டில் பங்கேற்க மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச்சிறப்பு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பு தன்னுடையது மட்டுமல்ல; அமெரிக்க வெள்ளை மாளிகையின் அழைப்பும்கூட என்று உரைத்தார்.

அமெரிக்க முதல் பெண் மணியாகிய திருமதி ஹிலாரி கிளிண்டன் எழுதிய, அவரது கையொப்பமிட்ட நூலையும், உலகத் தமிழ் இளைஞர் கூட்டமைப்புத் தலைவர் டாக்டர் விஜய் பிரபாகர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

இந்திய அமெரிக்கக் குடியரசு மையத்தின் தலைமைச் செயலாளர் திரு கீர்த்திகுமார் ரவூரி அவர்கள் சிகாகோ மேயரின் வாழ்த்துச் செய்தியை முதல்வர் அவர்களுக்கு அளித்தார்.

தமிழகத்தில் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் மத நல்லிணக்கம் காக்கப்படுகிறது. சிறுபான்மையினர் நலன் போற்றப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

அமெரிக்கப் பழங்குடியின மக்களின் மூதாட்டியான திருமதி ஆல்பர்ட்டா டே, தமிழ்நாட்டில் பழங்குடி மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப் படுகின்றன; இதனை அறிந்து, தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். பின்னர் அமெரிக்கப் பழங்குடியினர் தங்கள் கைகளால் நேர்த்தியாக பின்னிய வண்ணப் பூக்கூடை ஒன்றையும், தீயஆவிகளை விரட்டகூடியதாக நம்பப்படும் புனித இனிப்பு புல் ஒன்றை கண்ணாடிப் பேழையில் வைத்தும்,பரிசாக முதல்வருக்கு அளித்தார். அத்துடன் உணர்ச்சி வசப்பட்டு சிவப்பு இந்திய மொழியில் வீரநடை போடும் வீராங்கனை என்ற பட்டத்தையும் முதல்வருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

அமெரிக்காவிலுள்ள உலக அமைதி மையத்தின் வேந்தர் டாக்டர் கேத்தலின் லம்பிரட், முதல்வர் அவர்களின் சாதனை

யாக அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண்களுக்கான இட ஒதுக்கீடு போன்ற பணிகளைப் பாராட்டினார். பின்னர் இலண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மைகள் காட்சி யகத்தில் முதல்வர் அவர்களின் உருவச் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தார். உலகப் புகழ்வாய்ந்த தலைவர்களின் மெழுகு உருவச் சிலைகள் மட்டுமே இந்தக் காட்சியகத்தில் இடம்பெறும் என்பதும், இது உலகப் பெருமை வாய்ந்தது என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

நியூ ஜெர்ஸியில் உள்ள தேசியப் பெண் ஓவியர்கள் சங்கத்தைச் சேர்ந்த திருமதி எலா ஷா, முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசி, தன்னால் உருவாக்கப்பட்ட பச்சை நிறத்தி லான சிற்பத்தைப் பரிசளித்தார்.

சிகாகோ நகரைச் சேர்ந்த பார்பரா கரோல் பேசும்போது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் 48-வது பிறந்த நாள் இனிமேல் உலகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படும் என்றார். அதற்கான சான்றிதழையும் வழங்கி முதல்வர் அவர்களிடம் ஆசிபெற்றார். முதல்வர் அவர்களும் அவரை அன்புடன் அரவணைத்து அன்பு முத்தமிட்டார்.

பின்னர், டாக்டர் விஜய் பிரபாகர் கேவல் என்ற மரச்சுத்தியலை முதல்வர் அவர்களிடம் தர, அதனை மும்முறை மேசையில் தட்டி தனது பிறந்த நாளைக் குழந்

---

**பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப் பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்.**

**-மொழிஞாயிறு ஞா. தேவ நேயப்பாவாணர்**

---

தைகள் தினமாகக் கொண்டாட ஒப்பளித்துப் பிரகடனப் படுத்தினார்.


டாக்டர் விஜய் பிரபாகர் எழுதிய "வாழும் வரலாற்றுக்கு ஒரு புகழுரை" என்ற நூலை விஸ்கான்சின் மாநில செனட்டர் ரோட்னி மோன் அவர்கள் வெளியிட, அமெரிக்காவிலுள்ள பகதூர் அலி சர்வதேச ஆய்வு நிலையத்தின் தலைவர் திரு சல்பிகார் அலிகான் பெற்றுக் கொண்டார். செனட்டர் ரோட்னி மோன் விஸ்கான்சின் மாநில மேதகு ஆளுநர் அளித்த சிறப்புப் பாராட்டுப் பத்திரத்தை மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு வழங்கி, இந்தப் பத்திரத்தைப் பெறும் முதல் இந்தியர் முதல்வர் அவர்களே என்றும் குறிப்பிட்டார். பின்னர் டாக்டர் விஜய் பிரபாகர் பேசும்போது "முதல்வர் அவர் களின் 48-வது பிறந்தநாளை வரும் பிப்ரவரி திங்கள் 24-ஆம் நாள் 48 நாடுகளில் கொண்டாட முடிவு செய்துள்ளதாகவும், அவ்விழாவிற்கு அமெரிக்க முதல் பெண்மணி திருமதி ஹிலாரி கிளிண்டன் அழைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 1995-ஆம் ஆண்டுக் கான சிறந்த பெண்மணிக்கான விருதை செனட்டர் ஹோவார்டு கரோல் வழங்கினார். அவர் பேசுகையில் "சிகாகோவில் உள்ள தேவான் அவென்யூ என்ற பகுதியின் ஒரு பிரிவுக்கு "டாக்டர் ஜெ.ஜெயலலிதா" அவர்களின் பெயர் சூட்டப்படும். இதுவரை இந்தப் பெருமை மகாத்மா காந்திக்குத்தான் இருந்தது. இப்போது இரண் டாவது இந்தியரின் பெயராக டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப் படுகிறது" என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து இல்லினாய்ஸ் மாநிலத்தின் மதிப்புமிக்க நீலப் புத்தகத்தை முதல்வர் அவர் களிடம் வழங்கிச் சிறப்பித்தார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்புரை யாற்றினார். இறுதியாக உலகத் தமிழிளைஞர் கூட்டமைப்பின் செயலாளர் திரு பார்த்திபன் சண்முகம் நன்றியுரை யாற்றினார்.

மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்த கலைவாணர் அரங் கத்தில், நிகழ்ச்சி முடிந்து கலைந்து சென்றபோது, பெண் களில் சிலர், முதல்வர் அவர் களுக்குக் கிடைத்த பரிசும் பாராட்டும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியத் திரு நாட்டிற்கே பெருமை சேர்ப்ப தாகும் என்று மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள்.

**—நிகழ்ச்சித் தொகுப்பு: எம்.வி.எம். அசோகன்**



# பெரும்பிடுகு முத்தரையரின் பெயரும் புகழும் சாகாவரம் பெற்றுவிட்டன!

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புகழ்மாலை

**எ**ந்த ஒரு நாடு மாபெரும் மனிதர்களை வணங்குகின்றதோ, எந்த ஒரு சமுதாயம் நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்றுகின்றதோ, அந்த நாடும், அந்தச் சமுதாயமும் தான், வளம் பெற்று உயர முடியும் என்பது சரித்திரம் காட்டுகின்ற பேருண்மை ஆகும்.

சான்றோரையும், ஆன்றோரையும் மதிக்கின்ற தன்மை, இயற்கையாகவே தமிழக மக்களின் ரத்தத்தில் ஊறிய ஒரு உன்னத குணமாக விளங்கி வருகின்றது. ஆன்றவிந்துஅடங்கிய கொள்கைச் சான்றோர்களையும், அறிவார்ந்த பெருமக்களையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும் சமுதாய உயர்வுக்குப் பாடுபட்ட தலைவர்களையும் மதிப்பதில் தமிழக மக்களுக்கு ஈடு இணை எவரும் இல்லை. நல்லோரின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கடைப் பிடிப்பதில், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் தமிழக மக்கள்.

எனவேதான், தமிழக மக்களின் மனங்களிலே குடி கொண்டிருக்கும் பல்வேறு அரசியல் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் ஆகியோருக்குப் பெருமை சேர்க்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அவர்களது திருவுருவச் சிலைகளை அமைத்து வருகின்றது. அவர்கள் வாழ்ந்த இடங்களில் புதிய நினைவகங்களை உருவாக்கி வருகிறது. இந்தப் பணியை உங்கள் அன்புச்

சகோதரியாகிய நான், ஒரு புனிதப் பணியாகவே கருதி, செயல்படுத்தி வருகின்றேன்.

மாபெரும் மனிதர்களுடைய உண்மைச் சரித்திரங்கள், காலப் போக்கிலே மறைக்கப்பட்டும், சில நேரங்களில் இருட்டடிப்பும் செய்யப்படுகின்றன. அவ்வாறு நல்லவர்களின் வாழ்க்கை வரலாற்றை, மக்கள் மறந்துவிடக் கூடாது என்பதிலும் அந்த மாபெரும் தலைவர்களின் நினைவுகள், மக்களின் நெஞ்சங் களிலே என்றென்றும் பசுமை யாக நிலைத்து நிற்க வேண்டும் என்பதிலும் எங்கள் அரசு தீவிரமாக இருக்கிறது.

அந்தத் தலைவர்கள் விட்டுச் சென்ற, வாழ்க்கை நெறி முறைகளும், கருத்துக்களும் மக்கள் மனதிலே நிலைத்து நிற்க, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களை எங்கள் அரசு ஆரம் பத்தில் இருந்தே, ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டு வந்துள்ளது.

மாபெரும் மக்களைப் பாராட்டி மகிழ்வதில் நிச்சயமாக எங்களிடம் குறுகிய அரசியல் கண்ணோட்டம் இல்லை. மாறாக, நாட்டு மக்கள் மனங்களில் இடம் பெற்றுள்ள எல்லாத் தலைவர்களுக்கும், ஜாதி, மத, கட்சி அரசியல், ஏன் சித்தாந்த வேறுபாடுகள் கூட இன்றி, அவர்களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தும் வண்ணம் திருவுருவச் சிலைகளை அமைத் தும், போக்குவரத்துக் கழகங் களை ஏற்படுத்தியும், நினைவகங் களை உருவாக்கியும், மக்களின் உணர்வுகளுக்கு, மதிப்பளித்து வருகின்றோம். வேறெந்த ஒரு

## ● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

ஆட்சிக் காலத்திலும் சமுதாயத் தலைவர்களும், தமிழ் மாநிலம் தழைக்கப் பாடுபட்டவர்களும் இந்த அளவிற்குச் சிறப்பிக்கப் படவில்லை என்பது மட்டும் உண்மை.

''மக்கள் தான் இறுதி எஜமானர்கள்'' என்கின்ற ஜன நாயகக் கோட்பாட்டில், தீவிர நம்பிக்கை வைத்து, செயலாற்றி வரும் அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பெரியோரை மதிக்கும் திராவிடப் பாரம் பரியத்தின் மாண்பை, நல்லவர் களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தி வருவதன் மூலம், நாங்கள் மேலும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

தனது புரட்சிகரமான சிந்தனைகளால் தமிழக மக்களுக்குச் சுய மரியாதை உணர்வையும் தன்மான உணர் வையும் ஊட்டி வளர்த்தவர் தந்தை பெரியார் அவர்கள். வைக்கம் போராட்டத்தின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயில்களின் கதவுகளைத் திறக்க வைத்தவர் அந்த வெண்தாடி வேந்தர். புரட்சி கரமான அவரது வெற்றியை, உலகம் அறிய வைக்க, கேரள மாநிலம் வைக்கத்தில், எங்கள் அரசின் சார்பில், 15 இலட்சம் ரூபாய் செலவில், நினைவகம் ஒன்றை நாங்கள் அமைத் துள்ளோம்.

சென்னை, திருவல்லிக்கேணி யில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைக் கையகப் படுத்தி, அதை நினைவகமாக்கிச் சாதனை படைத்துள்ளது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

தாயகத்தின் விடுதலைக்காக, தம்மையே ஈந்த வீரர்கள் மருது சகோதரர்கள்; அவர்களின் நினைவாக, திருப்பத்தூரில், 6 இலட்சம் ரூபாய் செலவில் எங்கள் அரசு நினைவகம் ஒன்றை அமைத்துள்ளது.

எங்கள் அரசு கவியரசு கண்ணதாசனுக்கு, காரைக்குடி யில் மணிமண்டபம் அமைத்த தோடு அவரது திருவுருவச் சிலையையும் நிறுவியது. சென்னை தியாகராய நகரில் அவரது திருவுருவச் சிலையை நானே திறந்து வைத்தேன்.

பண்பாட்டுப் பெருமையும், பாரம்பரியச் சிறப்பும் மிக்க இந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் கோரி, உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தத் தியாகி சங்கரலிங்கனாருக்கும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பக ராமன் அவர்களுக்கும், தீரன் சின்னமலை அவர்களுக்கும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்கும், எங்கள் அரசு திருவுருவச் சிலை களை அமைத்து வருகின்றது.

வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பெயரிலும், வீரன் சுந்தரலிங்கம் பெருமகனாரின் பெயரிலும், போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சர் பிட்டி தியாகராயர்,

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், தேவர் திருமகன், அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோருக்கும் நினைவகங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என முழங்கிய மாமனிதர் பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்குச் சென்னையில் நாங்கள் சிலை அமைத்தோம்.

சென்னையில், பாபா சாகிப் டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களுக்கும், சென்னை மாநகரின் முன்னாள் மேயர் பெரியவர் சிவராஜ் அவர்களுக்கும், சிலைகளை நிறுவி, அவற்றை நானே திறந்து வைத்தேன்.

அந்த நற்பணிகளின் வரிசையிலே இன்று பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு, இங்கே திருவுருவச் சிலையை எழுப்பி உள்ளோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை முக்கூறாகப் பிரித்த போது, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவாக, இந்த மாவட்டத்திற்கு, திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் என்று பெயர் சூட்டினோம். இப்பகுதி வாழ் முத்தரையர் இன மக்கள், இதனால் எத்தகையதொரு மகிழ்ச்சியை அடைந்தார்கள் என்பதை, நான் நன்கு அறிவேன்.

'முத்தரையர்' என்ற சொல்லுக்கு, சேர, சோழ, பாண்டிய நாடு ஆகிய மூன்று தரைகளையும் ஒன்று சேர்த்து ஆண்டவர்கள் என்று சில நூல்களில் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, முத்தரையர்கள், கொங்கு நாட்டையும் ஆண்டதாகச் சில நூல்களில் குறிப்புகள் காணப் படுகின்றன.

சங்க காலத்தைச் சேர்ந்த 'நாலடியார்' என்ற நூலில், பெருமுத்தரையர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் "பெரு முத்தரையர்" என்ற சொற்றொடர் முத்தரையரைக் குறிப்பிடுவதாக, வரலாற்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர். திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நாடே, 'முத்தரையர் நாடு' என்று அழைக்கப்பட்டதாகவும், இந்த முத்தரையர் நாட்டை, பெரும் பிடுகு மன்னர்கள் ஆண்டு வந்ததாகவும், சில கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த முத்தரையர் மன்னர்களில், பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு என்பவர் மாபெரும் மன்னராகத் திகழ்ந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. இந்த மன்னரின் அளப்பரிய வீரமும், தீரமும், அவருக்கு 'பெரும்பிடுகு' என்றும், 'மார் பிடுகு' என்றும், பட்டப் பெயர்களைப் பெற்றுத் தந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. 'பிடுகு' என்றால், இடி என்று பொருள். தன் வீரத்தால் தனது எதிரிகளுக்குப் பேரிடியாக, சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்ததால், 'பெரும்பிடுகு' என்ற பட்டத்துடன், அவர் அழைக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

---

**வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.**

**–டாக்டர் ராதாகிருஷ்ணன்**

---

இந்திய தேசிய நீரோட்டத்தில் கலந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, பாடுபட்டுக்கொண்டு வரும், முத்தரையர் சமுதாய மக்களின் மனம் மகிழும் வண்ணம் 'பெரும்பிடுகு முத்தரையர்' அவர்களின் பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதோடு, இன்று அவரது திருவுருவச் சிலையையும், திருச்சி மாநகரில், உங்கள் அன்புச் சகோதரி திறந்து வைத்துள்ளேன்.

பாரத நாட்டின் வேறு சில பகுதிகளில் வாழ்ந்த பெரியவர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், சரித்திரத்தில் மிகப் பெரிய சாதனைகளாக, வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மண்ணின் மைந்தர்களாய் வாழ்ந்த சான்றோர்கள், ஆன்றோர்களின் புகழ் மட்டும் ஏன் வெளிப்படாமல் மறைக்கப்பட வேண்டும்? தமிழக மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், பல வகைகளில் சேவை புரிந்தோரை, தமிழகம் என்றென்றும் மறக்காது என்பதோடு எப்போதும் நன்றி பாராட்டும் என்பதையும் உலகிற்கு உணர்த்துவோம்.

தமிழகத்தின் இதயப் பகுதியில். விளங்கும் திருச்சிராப்பள்ளி சில நேரங்களில் தமிழகத்தின் இதயத் துடிப்பாகவும், செயல்படுவது உண்டு! இப்பகுதியின் வளர்ச்சிக்காக

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும், முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. அரசின் நலத் திட்டங்கள் பொதுமக்களுக்கு விரைவாகச் சென்றடையவும், மாவட்ட நிர்வாகத்தின் கவனம், எல்லாப் பகுதிகளுக்கும் கிட்டிடவும், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை,முக்கூறாகப் பிரித்தோம். புதியதாக உதயமாகியுள்ள, இந்த மாவட்டங்களின் முன்னேற்றத்திற்காக எல்லா வளர்ச்சிப் பணிகளையும், புதிய முனைப்புடன் செயல்படுத்துவோம் என்று உறுதி கூறுகின்றேன்.

இப்பகுதிவாழ் பெருமக்கள் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் பெயரைப் புதிய மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை என்னிடம் வைத்தபோது, நான் அவர்களது கோரிக்கையை மன மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியும் வைத்தேன். இனி காலப்போக்கில், சரித்திரத்தின் ஏடுகளிலே, இந்த மாமனிதரின் பெயர் மறைந்து விடும் என்று அஞ்சு வேண்டியதில்லை. மாறாக, மாவட்டத்தின் பெயரோடு அவரது பெயரும் புகழும் சாகாவரம் பெற்று விட்டன. நாளைய இளைய சமுதாயத்தினர், இந்தத் திருவுருவச் சிலையைக் கண்டு, மன்னர் பெரும்பிடுகு முத்தரையரின் சரித்திரத்தை, நிச்சயம் நினைவுகூர்வார்கள் என்பது உறுதி.

---

**கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதேயாகும்.**

**- தந்தை பெரியார்**

---

முத்தரையர் இனத்தைச் சேர்ந்த பெருமக்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 23 பட்டப் பெயர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுபட்ட சமுதாயமாக ஒரு பொதுப் பெயரின் கீழ் அழைக்கப்பட வேண்டும், என்ற கோரிக்கையை, இன்று என் முன் வைத்துள்ளார்கள். மக்களின் கோரிக்கையை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் உங்கள் அன்புச் சகோதரிக்கு என்றுமே ஒரு மகிழ்ச்சி உண்டு. இதே உணர்வுடன், உங்கள் கோரிக்கையை நான் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதுவரை 23 பட்டப் பெயர்களுடன் அழைக்கப்பட்ட பெரு மக்கள் அனைவரும் "முத்தரையர்" என்கின்ற ஒரு பொதுப் பெயரில், இனி அழைக்கப் படுவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணைகள், விரைவில் வழங்கப்படும். 23 பிரிவுகளில் அடங்கும், முத்தரையர் சமுதாய மக்கள், இதுவரை அனுபவித்து வந்த, சலுகைகள் அனைத்தும், எவ்விதமான பாதிப்பும் இன்றி தொடரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தரைய இன மக்களின் முன்னேற்றத்திற்காக அந்தச் சமுதாயத்தின் தலைவர்கள் இன்னும் சில கோரிக்கைகளை விடுத்தார்கள். அவற்றை எல்லாம் நான் கனிவுடன் பரிசீலித்து விரைவில் நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய முத்தரைய இனத் தலைவர்கள் எல்லாம் எனக்குப் பக்கபலமாக இருப்பார்கள் என்று கூறினார்கள். அதற்கு என் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்றுமே உங்கள் சமுதாயத்திற்கு நான் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

'முத்தரையர்' சமுதாயப் பெருமக்கள் நல்லிணக்க உணர்வுடன் மற்ற சமுதாயத்தினருடன் சேர்ந்து வாழ்ந்து தமிழகத்தின் ஏற்றத்திற்குத் தங்களது பங்கினைத் தொடர்ந்து ஆற்றுவார்கள் என்று நம்புகிறேன். இந்த முத்தரையர் சமுதாய மக்களின் வாழ்விற்கும், உயர்வுக்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, என்றென்றும் உறுதுணையாய் விளங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

இப்பகுதிவாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு வாழ்த்தி விடை பெறுகிறேன்.

*



# அண்ணல் அம்பேத்கருக்கு ரூ.5 கோடி மதிப்பில் மணி மண்டபம்:

## -மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**அரக்கோணத்தில் 8.1.1996 அன்று நடைபெற்ற அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியின் மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை.**

சமூக நீதியையும், சமத்துவச் சமுதாயத்தையும், சகோதரத் துவத்தையும் ஒருங்கே உணர்த்து கின்ற, இந்த மாபெரும் கூட்டத்தில் பங்கேற்று உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாட்டில் வாழும், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை முன்னேற் றத்திற்கு ஒரு தூண்டுகோலாக விளங்கிக் கொண்டிருக்கும் அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. தாழ்த்தப் பட்ட மக்களின் பாதுகாப்பிற்கு ஒரு கேடயமாக, அரணாகச் செயல்பட்டு வரும் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு

மேலாகச் செயல்பட்டு வரும் உங்கள் அன்புச் சகோதரியின் முக்கியக் குறிக்கோள், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தான்.

எத்தகைய ஒரு உயர்ந்த வாழ்க்கையை ஆதிதிராவிட மக்கள் வாழ வேண்டும் என்று, டாக்டர் அம்பேத்கர் கனவு கண்டாரோ அத்தகைய வாழ்க்கையை அவர்களுக்குப் பெற்றுத் தருவது தான் எங்களது தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல் அடுத்த தலைமுறையைப் பற்றி மட்டுமே சிந்திக்க, எங்களுக்குச் சொல்லித் தந்து சென்றிருக் கிறார்கள். கொண்ட கொள்கையை நிறைவேற்ற, எத்தனை எதிர்ப்புகள் எத்தனை இன்னல்கள், எத்தனைச் சவால்கள், எத்தனைச் சங்கடங்கள் வந்தாலும், அவற்றைத் துணிவுடன் எதிர் கொள்ளும் மனத் துணிவையும் வெல்லுகின்ற ஆற்றலையும் மாநாட்டைத் தஞ்சைத் தரணி யில் நடத்தி உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தினோம். உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மேற்கொண்ட சமூகநல, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், இன்று மத்திய அரசால் மட்டுமின்றி மற்ற மாநில அரசுகளாலும், கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றன. எல்லாத் துறைகளிலும் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தமிழகம் இன்று கண்டு வரு வதை எவரும் மறுக்க முடியாது.




ஒரே இலட்சியம். 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், 'பேரறிஞர் பெருந்தகை' அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், ஆகியோர் எங்களுக்கு வகுத்தளித்த இலட்சியப் பாதையில் அந்தக் குறிக்கோளை அடைந்திட நாளும் மக்கள் பணி ஆற்றி வருகின்றோம்.

பொது வாழ்க்கையில், எங்களை வழி நடத்திச் சென்ற மாபெரும் தலைவர்கள், அடுத்த இலட்சிய உணர்வையும் நாங்கள் இயற்கையாகவே பெற்றுள் ளோம்.

இன்று தமிழகம் எல்லாத் துறைகளிலும் முன்னிலையில் விளங்கிக் கொண்டிருக்கிறது! தொழில் துறையிலும், விளை யாட்டுத் துறையிலும் இன்று சர்வதேச வரைபடத்தில், நமக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளோம்! தமிழ்த் தாய்க்குச் சிறப்புச் சேர்க்க, எட்டாவது உலகத் தமிழ்

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் காக்க, நாம் செயல்படுத்தி வரும், 15 அம்ச நலத் திட்டமும், தொட்டில் குழந்தைத் திட்டமும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடித் திட்டங்களாக விளங்கி வரு கின்றன.

20 அம்சத் திட்ட வளர்ச்சிப் பணிகள் செயலாக்கத்தில் அகில இந்திய அளவில், கடந்த 3



**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கேரம் விளையாட்டில் உலகச் சாம்பியனான திரு மரியம் இருதயராஜுக்கு, 25 ஆயிரம் ரூபாய் மற்றும் நினைவுப் பரிசு வழங்கினார்.**

ஆண்டுகளாக முதலிடத்தைத் தக்க வைத்து வருகின்ற ஒரே அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான். வீட்டு வசதித் துறையாக இருந்தாலும் சரி, போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்புத் துறையாக இருந் தாலும் சரி, அந்தத் துறைகள் அகில இந்திய அளவில், பல்வேறு விருதுகளைப் பெற்று வருவது உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில்தான். அந்த வகையில் நாங்கள், ஆதிதிராவிட மக்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்காகப் பல புதிய திட்டங்களை உருவாக்கினோம். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கண்ட புதிய உலகைப் படைக்க நாங்கள் துணிவுடன் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி, அம்மக்களை ஆற்றல் படைத்த வர்களாக மாற்றிக் கொண்டு வருகின்றோம்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் பல்முனை மேம் பாட்டிற்குக் கலங்கரை விளக்க மாகத் திகழ்ந்தவர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்றத் தலைவர்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உண்டு. செல்வச் செழிப்பும், செல்வாக்கும் பரம்பரைப் பாரம்பரியமும் உள்ளவர்கள் தான் நாட்டை ஆளவும், சட்டங்களை இயற்றவும் முடியும் என்ற எண்ணத்தை தனது வாழ்க்கையின் மூலம் தகர்த்தெறிந்து காட்டியவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உதித்து சாதி, சமய வேறு பாடுகளைக் களைந்து அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் தயாரிக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டு, சமதர்மச் சமூக நீதித் தத்துவங் களை வேரூன்றச் செய்ய உதவியவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அவர் விட்டுச் சென்ற அவரது இலட்சியக் கனவுகளை நனவாக்க அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியினர் சகோதரர் திரு மூர்த்தி அவர்கள் தலைமையில், ஒரு பொது நல உணர்வோடு, செயல்பட்டு வருவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த முன்னணியின் செயல் வீரர்கள் தாங்கள் மேற் கொள்ளும் எல்லாப் பணி களிலும் தொடர்ந்து வெற்றி களைப் பெற்றுச் சிறப்புகளை அடைய எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர் ஒரு தனி மனிதர் அல்ல. ஒரு மாபெரும் இயக்கம்! அவரது இலட்சியங்கள் ஒரு தனி மனிதரின் சிந்தனைகள் அல்ல ஒரு சமுதாயத்தைப் பண்படுத்தி வளம் பெறச் செய்யும் ஆயுதங்கள்! இருட்டினில் வாழும் இதயங்களை வெளிச்சத் திற்குக் கொண்டு வர வேள்வியை மேற்கொண்ட அந்த மாமனிதரின் நினைவுகள் என்றென்றும் சமுதாயத்தில் ஒரு

தாக்கத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே தமிழக அரசின் சார்பில் அவரது திருவுருவச் சிலை ஒன்றை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு சென்னையில் நிறுவியது. 5 கோடி ரூபாய் மதிப்பில் அண்ணலுக்கு மணிமண்டபம் ஒன்றையும் சென்னையில் உருவாக்கி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. இத்தனை ஆண்டுகளாகச் சென்னை மாநகருக்கு இல்லாத இந்த இரண்டு சிறப்புகளையும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

சமதர்மத்திற்கும், சமூக நீதிக்கும் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு வழிகாட்டியாக எப்போதும் விளங்கி வருகிறது. இன்றல்ல நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மாபெரும் உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்கள் நம் முன்னோர்கள். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று முழங்கியவர் முதுபெரும் ஔவை தமிழ் மூதாட்டி. சாதி வேறுபாடுகளைக் களைந்து, இறைவனையே ஆட்கொண்டவர், இந்தப் பூமியில் அவதரித்த கண்ணப்ப நாயனார். இறைவன் முன்பு அனைவரும் சமம் என்று முழங்கியவர் நமது நாட்டில் பிறந்த ஸ்ரீராமானுஜர்.

"காக்கை குருவி எங்கள்
ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள்
கூட்டம்
நோக்குந் திசையெலாம்
நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக்
களியாட்டம்"

என்று அஃறிணைப் பொருட்களையும், உயர்திணையோடு சேர்த்து ஒரே சாதியாகக் கண்டவர் மகாகவி பாரதியார். சமுதாயத்தின் மூட நம்பிக்கைகளையும், கொடிய பழக்க வழங்கங்களையும், ஜாதி வேற்றுமைகளையும் உடைத்து எறியும் மாபெரும் வேள்விக்குத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் அவர்கள். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்று பொது வாழ்க்கையின் புது அர்த்தத்தை நமக்குப் போதித்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். சாதி மத பொருளாதார பேதம் ஆகியவற்றைக் கடந்து, நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற குடும்பப் பாச உணர்வை ஊட்டி வளர்த்தவர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். "உனக்கொரு பங்கும், எனக்கொரு பங்கும் நிச்சயம் உண்டு உலகிலே" என்று தனது பாடல்கள் வழியே புரட்சித் தலைவர் காட்டிச் சென்ற சமத்துவக் கொள்கைகள், இன்று உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு வழிகாட்டிகளாக விளங்கி வருகின்றன.

**பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவிதப் பேத நிலையும் ஒழிந்த நிலையில் தான் வளரமுடியும். ஒழுக்க அடிப்படையே இன்ப வாழ்வு.**

**- தந்தை பெரியார்**

ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டில், நாங்கள் கொண்டுள்ள அதீதமான ஈடுபாட்டை அத்துறை, அவர்களின் நலனுக்கு ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயல்பாட்டிற்கு 1991-92-இல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 103 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் அந்த ஒதுக்கீடு, இன்று இரண்டு மடங்காகி, நடப்பாண்டில், 205 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆதிதிராவிடர் நலனில் உங்கள் அன்புச் சகோதரியின் அதிகமான ஈடுபாட்டை இது விளக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

திட்டங்களைத் தீட்டுவதில் மட்டுமே மகிழ்ச்சியை அடைகின்ற அரசு அல்ல இந்த அரசு. மாறாக, தீட்டிய திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு, பின்னர் மக்களுக்குச் சென்றடைகின்றனவா என்பதை விழிப்புடன் கண்காணித்து வரும் துடிப்புள்ள ஒரு அரசு.

நான் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, ஆதி திராவிடப் பெருங்குடி மக்களின் நலனுக்காக 10 அம்ச சிறப்புத் திட்டத்தை, அறிவித்தேன். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவி, விவசாயக் குடும்பத்திற்குப் பாசனக் கிணறுகள் அமைக்க நிதி உதவி, தொழில் தொடங்க நிதி உதவி,

தொழில் கல்வி, பெற்றோருக்கு வேலைவாய்ப்புகள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், Concrete தளம் அமைந்த இலவச வீடுகள், குடிநீர் வசதி, குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள், 'ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின் விளக்கு வசதி ஆகியவற்றை இத்திட்டத்தின் கீழ் ஒரு முனைப்புடன் ஏற்படுத்தி வந்துள்ளோம்.

Our Government is firmly committed, both in letter and spirit to the ultimate upliftment of the downtrodden and the suppressed.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் நாங்கள் மேற்கொண்ட நலப் பணிகளும் அவைகள் சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் சுட்டிக் காட்டுவது பொருத்தமுடைய தாக இருக்கும் என்று கருது கிறேன்.

எங்களைப் பொருத்த வரையில், நமது திட்டங்களின் பயன்கள் மக்களுக்குச் சென்று அடைய உதவுகின்ற சாதனங் களாக நிர்வாக வரைமுறை களும் கொடுக்கப்படும் இலக் குகளும் இருக்க வேண்டும். நிச்சயமாக அவை முட்டுக் கட்டைகளாக அமையக் கூடாது. எங்கள் செயல்பாட்டிற்கு விதி முறைகள் தடையாக மாறிய போதெல்லாம் அவற்றை நாங்கள் துணிவுடன் தகர்த் தோம். எனவேதான் இலக்கு களை எளிதாக அடைந்தோம்.

3.5 இலட்சம் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்பது

---

**வரவுக்கும் மேலாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுத்திக் கொண்டு துன்பப்படுபவர்கள், நாணயமாய் வாழ முடியாமல் நாட்டுக்குத் தொல்லை விளைவிப்பவர்கள்.**

**- தந்தை பெரியார்**

---

இலக்கு. ஆனால் உதவி பெற்ற வர்களின் எண்ணிக்கையோ 3.9 இலட்சம் குடும்பங்கள். 10,000 பாசனக் கிணறுகள் அமைப்ப தற்கு நிதி உதவி வழங்க ஆணை. ஆனால், நாங்கள் அமைத்ததோ 12,000 பாசனக் கிணறுகள். 5,000 பேருக்குத் தனி நபர் தொழில் தொடங்க நிதி உதவி வழங்கப் பட வேண்டும் என்பது இலக்கு. உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் உதவி பெற்றதோ, 5,770 நபர்கள். ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கு வதில் நாங்கள் புதிய முறை களைக் கையாண்டோம். தடையாக இருந்த விதிமுறைகள் விலக்கி வைக்கப்பட்டன. இலக்கு என்னவோ 4 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் மட்டுமே! ஆனால், நாங்கள் இதுவரை வழங்கி இருப்பதோ 7 இலட்சத்து 75 ஆயிரம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.

ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு உதவி வழங்கத் திட்டம் தீட்டப்பட்டது ஆனால், இன்றைய அளவில் எங்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் இந்த வசதியைப் பெற்ற ஆதிதிராவிடக் குடும்பங்களின் எண்ணிக்கையோ இரண்டு இலட்சத்து 5,000 ஆகும்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்குத் Concrete தளம் அமைந்த வீடுகளைக் கட்டித் தருவதில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு புதிய சாதனையைப் படைத்துள்ளது. கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஆகும் கூடுதல் செலவினத்தைத் தமிழக அரசே மேற்கொள்ள வழி வகை செய்தோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவ தற்கு முன்பு 1981 முதல் 1991 வரை அதாவது பத்தாண்டுக் காலகட்டத்தில் 96,801 Concrete தள வீடுகள் கட்டி வழங்கப் பட்டுள்ளன. ஆனால், எங்கள் ஆட்சிக் காலத்தில், 1991 முதல் 1995 வரை நான்காண்டுகளில் மட்டும் 1,34,132 Concrete தள வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, இந்த ஆண்டு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ஒரு சிறப்பினமாக 70,187 Concrete வீடுகள் 147 கோடி ரூபாய் மதிப்பில் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வரு கின்றன. ஆதிதிராவிட மக்களுக்கு Concrete வீடுகளைக் கட்டி வழங்கும் பணியில் எங்கள் அரசு ஒரு ஆத்மார்த்த ஈடு பாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

குடிநீர் வசதி, இணைப்புச் சாலை வசதி, மின் விளக்கு வசதி, இடுகாட்டு வசதி, இடுகாட்டுக்குச் செல்லும் பாதை வசதி ஆகிய அடிப்படை வசதி களை எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் வழங்க வேண்டும் என்று நான் ஆணை

பிறப்பித்துள்ளேன். அதற்காக 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் இல்லை என்று கணக்கிடப்பட்ட 2,905 குடியிருப்புகளில் இது வரை 2,000 குடியிருப்புகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப் பட்டுள்ளன. இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மீதமுள்ள 905 குடியிருப்புக்கும் இந்த வசதிகள் செய்து தரப்படும். தமிழகத்தில் உள்ள 31,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகள் கிடைத்து விடும். அடிப்படை வசதிகள் இல்லாத ஆதிதிராவிடர் குடியிருப்புகளே இல்லை என்ற ஒரு உன்னதமான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கிக் காட்டுவோம்.

சமீபத்தில் 28 உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான ஆதிதிராவிடர் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து ஆதி திராவிடர் நலன்காக்க ஒரு புதிய பாதையை அமைத்துள்ளது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. 1.12.1995 அன்று இந்தக் குழுவின் முதல் கூட்டம் நடை பெற்றது. தமிழகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்து இதில் பங்கு கொண்ட எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள் வழங்கிய கருத் துக்கள் இன்று செயல்வடிவம் பெற்று வருகின்றன.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாண்புமிகு திரு சாமிதுரை அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட 9 பேர் அடங்கிய மாநில ஆதி திராவிடர் நலக் கமிஷன் இந்தியத் துணைக் கண்டத்தின் பல பாகங் களிலிருந்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இந்தக் குழு வழங்கும் பரிந்துரைகளை எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் பொருளாதார மேம் பாட்டோடு கல்வி மேம்பாட்டை யும் அடைய வேண்டும் என்ற இலட்சிய உந்துதலில் நாங்கள் மேற்கொண்டு வரும் திட்டங்கள் இன்று புதிய விடியலுக்கு வழி வகுத்து வருகின்றன. ஒரு புறம் ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விடுதிகள் அதிகரித்துள்ளன. பயில் வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மறுபுறம் உயர்நிலைப் பள்ளிகளில் இறுதி வகுப்புத் தேர்ச்சி 43 சதவிகிதத்திலிருந்து 57 ஆக உயர்ந்துள்ளது, மேநிலைப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி 38 சதவிகிதத்திலிருந்து 58 ஆக உயர்ந்துள்ளது, உங்கள் அன்புச் சகோதரி ஆட்சியின் இன்னொரு புதிய மைல் கல் ஆகும்.

ஆதிதிராவிடப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 5 மாவட்டங்களில் 3-ஆம் வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை தொடக்கக் கல்வி பயிலும் ஆதிதிராவிடப் பெண் குழந்தை களுக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் நிதி உதவி வழங்கி அவர்களின் தொடக்கக் கல்விக்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் பாதுகாத்து வரு கின்றோம். மேலும், ஆறாம் வகுப்பில் அடி எடுத்துவைக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 60,000 பெண் குழந்தைகள் பயன் அடையும் இத்திட்டம் தற்போது மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கென 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு புறம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும், மறு புறம், சமூக விழிப்புணர்வுத் திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் மேற்கொண்டு வரும் நல்ல முயற்சிகளுக்குச் சிலர் உதவிகரமாக இல்லாவிட்டாலும் அரசியல் மனமாச்சரியங்களை முன்னிலைப்படுத்தி, இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளையும் மிகைப்படுத்தி, அரசைக் குறை கூறி வருகின்றனர். போற்றலும், தூற்றலும் அத்தகையோர்களின் குற்றச்சாட்டுக்களும் எங்களது பணி ஆர்வத்தைச் சற்றும் குறைத்துவிடாது. இது வரலாறு காட்டும் உண்மை ஆகும்.

சமீபத்தில் நான் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்குச் சென்று அப்பகுதியின் அரசியல் கட்சித் தலைவர்களையும், சமுதாயத்

**சோம்பலினால், உடல் மட்டு மல்ல; மனமும் கெட்டுவிடும்.**

**—சாரதா தேவியார்**

தலைவர்களையும், பொது மக்களையும் சந்தித்துப் பேசினேன். தேவையற்ற சந்தேகங்களைப் போக்கிவிட்டு வந்தேன். ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு எங்கள் அரசு என்றென்றும் ஓர் அரணாகவும், பாதுகாவலர்களாகவும் விளங்கும் என்பதை, இது உறுதிப்படுத்தி உள்ளது. ஆதிதிராவிட மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் நாங்கள் தொய்வின்றித் தொடர்ந்து செயலாற்றுவோம். எங்கள் பாதையில் எத்தனைத் தடைகள் போடப்பட்டாலும், அவற்றை ஒரு சவாலாகக் கருதி துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி பெறுவோமே தவிர, ஒருபோதும் பின் வாங்க மாட்டோம்.

ஆதிதிராவிட மக்கள் காவல் துறைப் பணிக்குத் தேர்வு செய்யப்படும் போது, அவர்களது உயரம் ஒரு தடையாக இருந்து வந்தது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உயரமான 168 சென்டிமீட்டர் அளவிலிருந்து 3 சென்டிமீட்டர் அளவு உயரத்தைக் குறைத்து 165 சென்டி மீட்டர் உயரம் இருந்தாலே அதாவது, ஐந்தரை அடி உயரம் இருந்தாலே போதும் என்ற புதிய சலுகையை நான் சமீபத்தில் அறிவித்தேன். 10,000க்கும் மேற்பட்ட காவலர்கள் புதிதாகத் தேர்வு செய்யப்படும்போது அதில் 1,800 பேருக்கும் அதிகமான ஆதிதிராவிட மக்கள் இடம் பெறுவார்கள் என்பதை எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் இன்று எல்லாத் துறைகளிலும் வியக்கத் தக்க சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். Common Wealth விளையாட்டுப் போட்டிகளில் நான்கு முறை பதக்கங்களைப் பெற்ற பளு தூக்கும் வீரர் திரு கருணாகரன் அவர்கள், அர்ஜுனா விருதையும் பெற்றுத் தமிழகத்திற்குச் சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார். அதேபோல சர்வதேச அளவில் கேரம் விளையாட்டில் புகழ் பெற்று விளங்கும் திரு மரியம் இருதயராஜ், இமயமலைத் தொடர்ச்சியில் அமைந்துள்ள மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தில் 18,000 அடி வரை ஏறி, சாதனைப் படைத்துள்ள இளைஞர் திரு தேவா Kungfu மற்றும் Karate போன்ற வீர விளையாட்டுக்களில் வல்லுநராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் திரு நேசன் ஆகியோர் தமிழகத்தின் பெருமைக்குரிய மைந்தர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சரியான நியாயமான வாய்ப்புகள் கிடைத்தால், எந்தப் பிரிவைச் சார்ந்த மக்களும், வாழ்க்கையில் உயர்ந்து வெற்றி பெறுவார்கள் என்பதை இந்தச் சாதனையாளர்கள் நிரூபித்துள்ளார்கள். அவர்களது சாதனையைப் போற்றும் வண்ணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் வீதம், ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் இனத்தின் இளைய தலைமுறையினர் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்பதே எனது பேரவா. அவ்வாறு அவர்கள் மேற்கொள்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் அரசு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டை இத்தனைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த அன்புச் சகோதரர் திரு எம். மூர்த்தி அவர்கள், அடக்கமும், பண்பும் அமைந்த துடிப்பான ஒரு இளைஞர். அடக்கம் இருக்கும் அதே நேரத்தில் அவரிடம் தெளிந்த மனத் துணிவையும் செயலாற்றலையும் ஒருங்கே நான் காண்கின்றேன். அவரோடு தோளோடு தோள் நின்று பணிபுரியும் இலட்சிய உணர்வு மிக்க கூட்டத்தைக் காணும் போது எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும் நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே எனது பேரவா. ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் இந்த நாட்டின் மைந்தர்கள். அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் அனைத்தையும் பெற்றுச் சீரியதோர் வாழ்க்கையை மேற்கொள்ள உங்கள் அன்புச் சகோதரியின் அரசு புதிய உறுதியுடன் முனைப்புடன் தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



காவிரி நதிநீர்ப் பிரச்சினை:

# அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழக நலனைக் கருத்தில் கொண்டு, சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளு வதற்கு இங்கே நாம் குழுமி யுள்ளோம் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், **6.2.1996** அன்று தேசிய நீர் வளக் குழுமத்தின் கூட்டத் தினை, புது டில்லியில் கூட்டி யுள்ளார்கள். இந்தக் குழுமத்தின் உறுப்பினர் என்ற முறையில் நான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழகத்தின் சார்பில், கருத்துக்களைத் தெரிவிக்க உள்ளேன். அப்போது விவாதிக் கப்பட இருக்கின்ற பொருள் களின் மீது, தமிழக அரசின் உறுதியான நிலையைத் தெரிவிக்கவும், சரியான அணுகு முறையை மேற்கொள்ளவும், உங்களது மேலான கருத்துக் களையும், ஆலோசனைகளையும் கேட்கத்தான் இந்தக் கூட்டத்தை நாங்கள் கூட்டியுள்ளோம்.

**6.2.1996** அன்று நடைபெறு











கின்ற கூட்டத்தில், பல மாநிலங்கள் வழியே செல்லும், ஆறுகளின் நதி நீர்ப் பங்கீடு குறித்து மத்திய அரசு தயாரித்துள்ள, கொள்கை குறிக்கோள்கள் — அதாவது National Policy விவாதிக்கப்பட உள்ளன. இந்தக் குறிக்கோள்களின் முக்கியமான சில அம்சங்களை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல மாநிலங்களின் வழியே ஓடும், ஆற்று நீரைப் பங்கீடு செய்வதற்கு, சில அடிப்படைகளை மத்திய அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது.

முதலில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், அந்த ஆற்றில் சேரும் நீர்வரத்து அந்த மாநிலத்தில்

பெய்து ஓடும் மழை நீர் அளவு ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு மாநிலத்தின் வறண்ட பகுதிகளின் பாசன நீர்த் தேவை மாநிலத்தில் நீர்ப்பாசன மேம்பாட்டு நிலை, சாகுபடிக்கு ஏற்ற பரப்பளவு, மேலும் மற்ற மாநிலங்களோடு அதன் ஒப்பீடு, வரும் எதிர்காலத்தின் தேவைகள், குடிநீர், நீர் மின் உற்பத்தி, இதர நீர் உபயோகத் தேவைகள் ஆகியவற்றையும், மாநிலங்களின் பொதுவான, பொருளாதார முன்னேற்ற நிலையையும், கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், நிலத்தடி நீர்ப்பாசன மேம்பாட்டின் மூலம், ஏற்படும் நீர்ச் சிக்கனம், நீர் உபயோகப் பயன்பாட்டு அதிகரிப்பு ஆகியவற்றையும் மாநிலத்தின் பிற நீர் வள வாய்ப்புகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் 6ந் தேதி நடைபெற உள்ள கூட்டத்திற்காக, இப்போது கிடைக்கப் பெற்றுள்ள குறிப்புகளில் காணப்படுகின்றன.

ஆனால், நம் நாட்டில் ஏற்கெனவே, நிலை பெற்றுள்ள பாசனம், அதற்கான காப்பு முறைகள், உயர்ந்த உற்பத்தித் திறன் கொண்ட படுகைப் பகுதிகளில் உபயோகிக்கும் நீரின் அளவு போன்ற இதர அம்சங்களும், மரபுரிமைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நமது மாநிலத்தை, குறிப்பாக காவிரிப் பாசனத்தைப் பெரிதும் பாதிக்கும்.

இது பற்றி ஏற்கெனவே, தமிழக அரசுக்குக் கிடைத்த கொள்கைக் குறிப்பை, நாங்கள் கவனத்தோடு பரிசீலனை செய்தோம். மத்திய நீர்க் குழுமம், அதாவது Central Water Commission, *17.5.1994* அன்று அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்குத் தமிழக அரசு தனது பதிலை, *24.6.1994* அன்றே, மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் உரிமைகள், எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது, நமது ஜீவாதார உரிமைகள், மறுக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில்தான் நமது கருத்துக்களை மத்திய அரசுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் **1.1.1996**-இல் எனக்கு எழுதிய கடிதத்தில், இந்தக் கொள்கைக் குறிப்புகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டி, இந்த வழிகாட்டி விதிமுறைகளை விவாதித்து முடிவு செய்ய விரைவில் ஒரு கூட்டம், கூட்டப்படும் என்பதையும் தெரிவித்திருந்தார்கள். எனவே, இந்த விஷயத்தைப் பற்றிய தமிழக அரசின் சார்பில் நமது திண்ணமான கருத்துக்களை நான் *13.1.1996* அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளேன். அந்தக் கடிதத்தின் நகலும், தமிழாக்கமும், உங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தில், ஆலோசனைக்குரிய கொள்கைக் குறிக்கோள்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு **262**-இன் கீழ், உருவாக்கப்பட்ட நடுவர் மன்றத்தை ஒருக்காலும் கட்டுப்படுத்தாது. மேலும், இது போன்ற Guidelinesகளைச் சட்டமாக்குகின்ற அதிகாரமும், திறனும், நாடாளுமன்றத்திற்கும் இல்லை. அதுமட்டுமின்றி, நிர்வாக முறையிலும், இத்தகைய Guidelinesகளை நடைமுறைப்படுத்த, மத்திய அரசுக்கு, சட்டரீதியான அதிகாரமும் இல்லை.

அவ்வாறு பிறப்பிக்கப்படும் குறிக்கோள்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தில் நீதித் துறைக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் முறையற்ற முறையில் தலையிடுவதாகக் கூட அமைந்துவிடும். ஆகவே, அத்தகைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாகும் என்ற சட்ட வல்லுநர்களின் கருத்தையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்த வழிகாட்டி விதிமுறைகள் நீதி முறைக்கும் நீதி முறைப்படி விசாரிக்கும் மன்றத்திற்கும், அம்மன்றத்தின் நடவடிக்கைகளுக்கும், குந்தகம் விளைவிக்கும். ஏற்கெனவே நடுவர் மன்றத்திற்கு விடப்பட்டு விசாரணையில் உள்ள காவிரி நதி நீர்த் தாவாவில்,இந்தப் புதிய Guidelinesகளைப் புகுத்த, சற்றும் இடமில்லை என்ற கருத்தையும், ஆணித்தரமாக வலியுறுத்த உள்ளேன்.

---

**சமுதாயத்து ஒன்றுபடாத எந்த மனிதனும் முழுமை பெற்றவனாக ஆகமாட்டான்.**

**—டாக்டர் ராதாகிருஷ்ணன்**

---

> உன் சொந்தப் புத்திதான் உனக்கு வழிகாட்டி. அதை நல்ல முறையில் பயன்படுத்து, பிறரிடமுள்ள அவநம்பிக் கையைக் கைவிடு.
>
> - தந்தை பெரியார்

தேசிய நீர்வளக் கொள்கை பாசனத் தேவைகளுக்கு மட்டு மல்லாமல், ஒரு மாநிலத்தின் இதர நீர்த் தேவைகளையும் கருத்தில் கொண்டு, மற்ற நீர்த் தேவைகளுக்கும், அவற்றை எவ்வாறு, ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்தலாம் என்று திட்டமிடுகிறது. மேலும், நடைமுறையில் உள்ள சட்டங்கள், ஒப்பந்தங்கள், அல்லது நடுவர் மன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப் படையில் நீர்வளத்தின் பயன் திறனை, எந்த அளவிற்கு அதிகரிக்கலாம் என்றும் ஆராய் கிறது. ஒப்பந்தங்கள் ஏற்படாத நிலையில் நடுவர் மன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் மட்டுமே, நீரைப் பங்கீடு செய்வது அதிகப் பயன் தரும் என்பதுதான் உண்மை நிலை. தேசிய நீர் வளக் கொள்கையில் கண்ட ஒவ்வொரு கருத்துக்கும் வழிகாட்டி விதிமுறைகளை, அதாவது Guidelinesகள் வகுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாதது மட்டுமின்றி, அவ்வாறு கொள்கைக்கும் வழி காட்டி விதிமுறைகள் வகுப்பது இயலாத காரியமும் ஆகும்.

அது மட்டுமின்றி, ஏற்கெனவே நடைபெற்ற தேசிய நீர் வளக் குழுக் கூட்டத்தில் நதி நீர்ப் பங்கீடு பற்றிய வழிகாட்டி விதிமுறைகளைத் தேசிய நீர் வளக் கொள்கையில் சேர்க்க வேண்டாம் என்று,அதாவது National Water Policyயில் Water sharing Guidelinesகள் எதுவும் சேர்க்க வேண்டாம் என்று தெளிவாக முடிவு எடுக்கப் பட்டுள்ளது. கடந்த தேசிய நீர் வளக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது, மறைந்த பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், பன்மாநில நதிநீர்த் தாவாக்கள் சட்டத்தின் கீழ்—அதாவது, Inter-state Water Disputes Actன் கீழ், அமைக்கப் பட்ட பல்வேறு நடுவர் மன்றங்கள் பல வழக்குகளை ஆராய்ந்து தங்களது தீர்ப்புகளை வழங்கியுள்ளன என்றும், அந்தத் தீர்ப்புகள் எல்லாம், தற்போது மேற்கோள் ஆவணச் சட்டங் களாக - அதாவது Case Lawக் களாக அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இத்தகைய Guidelinesகளைத் தேசிய நீர்க் கொள்கையில் சேர்க்கக் கூடாது என்று 1987-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுமத்தின் இரண்டாவது கூட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்.

ஒரு வேளை இத்தகைய வழிகாட்டி விதிமுறைகள் அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட, அது கவைக்கு உதவாது, நிர்வாக முறையில் உருவாக்கப் பட்டிருந்தாலும் கூட அது ஓரளவிற்கு மட்டுமே பயனைத் தருமே தவிர, நிரந்தரமாகப் பயன் அளிக்காது. இத்தகைய நிர்வாக ரீதியான கொள்கை வழிகாட்டிகள் சம்பந்தப்பட்ட மாநிலங்களை முழுமையாக எந்த வகையிலும் கட்டுப்படுத்த இயலாது. மேலும், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கொள்கை குறிக் கோள்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லாதபோது அவற்றைச் செயல்படுத்தாது. எனவே, இதனால் எந்தப் பயனும், எவருக்கும் கிடைக்காது என்பது தான் நடைமுறை உண்மை.

ஒவ்வொரு நதிநீர்ப் படுகை யும், தனித் தன்மையைக் கொண்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நதிநீர்ப் படுகையின் புள்ளி விவரங்கள், ஏற்கெனவே நிலை நாட்டப்பட்ட உரிமைகள் மற்றும் அந்தப் படுகைக்கு உண்டான நீர் உபயோக விதிமுறைகள் ஆகியவை தனித் தன்மை படைத் தவை ஆகும். இது போன்ற பொதுவான கொள்கை வழிகாட்டி விதிகள் மூலம் தனிப்பட்ட நதி நீர்ப் பங்கீட்டு வழக்குகளைத் தீர்த்து வைக்க முடியாது. மாறாக, சில சமயங் களில் இவற்றால், பாதகமான எதிர் விளைவுகளும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தில் முறையாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இந் நிலையில் இத்தகைய கொள்கை வழிகாட்டி விதிகள் தேவை யற்றவை - பயனற்றவை என்ப தோடு, நீதி நிலைக்கும் முரணானவை என்பதே நமது ஆணித்தரமான கருத்து என்று திட்டவட்டமாக எடுத்துக்கூற வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

மாநிலங்களுக்கு இடையே ஆன நதிநீர்ப் பங்கீட்டில் ஆண்டாண்டுக் காலமாக ஒரு மாநிலம் மரபுரிமையாக அனுபவித்து வரும் உரிமைகளை இன்னொரு புதுத் தேவையைக் காரணம் காட்டி, தட்டிப்பறிக்கக் கூடாது — தட்டிப் பறிக்கவும் முடியாது.

சமநீர்ப் பங்கீடு முறை, அதவாது Equitable distribution என்ற கொள்கையின் அடிப் படையில் நீரைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று விவா திக்கும் போது ஏற்கெனவே ஒரு மாநிலம் அனுபவித்து வரும் மரபுரிமைகளுக்குக் கண்டிப் பாகக் குந்தகம் ஏற்படாமல் பாது காத்தாக வேண்டும். மத்தியத் திட்டக் குழுவும், அதாவது Union Planning Commissionம் இந்தக் கொள்கை வழிகாட்டி விதிகளைப் பரிசீலனை செய்து இதனைக் கடுமையாகச் சாடியிருக்கிறது. இக்கொள்கை வழிகாட்டி விதி களை நிறைவேற்ற வேண்டிய சட்ட அதிகாரம், மத்திய அரசுக்கு இல்லை. நடை முறைக்கு ஒவ்வாத இந்த வழிகாட்டி விதிகளைச் செயல் படுத்துவது மிகச் சிரமமான காரியம்; குறிப்பாகப் பகுதி மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி நீர்ப் பங்கீட்டை மேற்கொண்டால் மேலும் பல புதிய சிக்கல்கள் உருவாகக் கூடும். தொன்று தொட்டு அனுபவ ரீதியாக நாம் பெற்ற உயரிய நெறிகளின் அடிப்படையில் வந்துள்ள நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் மரபுரிமைகளுக்கும் இவ்வாறு நாம் நிர்ணயித்த புதிய வழிகாட்டி விதிமுறைகள் எந்த ஒரு காலத்திலும், ஒரு சரியான மாற்றாக, அதாவது Suitable substituteஆக அமைய முடியாது. ஆகையால், இக்கொள்கை வழிகாட்டி விதிகளை மறு பரிசீலனை செய்ய வேண்டியது மிக இன்றியமையாதது என்று மத்திய திட்டக் குழு ஏற்கெனவே மத்திய அரசை வலியுறுத்தி யுள்ளது. இப்பொழுது வரையப் பட்ட வழிகாட்டி விதிகளை ஏற்க இயலாது என்றும், மத்தியத் திட்டக்குழு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ஒரு பொருளைப் பற்றி, ஒரே மாதிரியான கருத்தைப் பலரும் தெரிவித்தால், அந்தக் கருத்து நிச்சயமாக ஏற்புடைய, நியாயமான கருத்தாகத் தான் இருக்க முடியும். அந்த வகையில் புதிய விதிமுறைகளை ஏற்படுத்துவது சரியானது அல்ல என்ற நமது கூற்றையே, மத்தியத் திட்டக் குழுவும், தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளது. நமது கருத்துச் சரியானதே, நியாயமானதே என்பதை மேலும் உறுதிப் படுத்தியுள்ளது.

தமிழகத்தின் நலன் காக்க, நாம் உறுதியான நிலையை, இதில் மேற்கொண்டு வந்துள் ளோம். நிச்சயமாக நமது நிலையில், எந்த மாற்றத்தையும் ஒப்புக்கொள்ள நாம் தயாராக இல்லை. நாம் இதுவரை எடுத் துள்ள முடிவுகள் நியாயமான உணர்வின் அடிப்படையிலும், சட்ட நுணுக்கங்களின் அடிப் படையிலும், நிர்வாக நடைமுறை களின் படியும், மேற்கொள்ளப் பட்டவை என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எங்கள் அரசு எடுக்கும், உறுதி யான முடிவுகளுக்கு நீங்கள் முழு ஆதரவு தருவீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தப் பொருள் குறித்து, இங்கே குழுமியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமுதாய நல இயக்கத் தலைவர்களும், தங்களது மேலான கருத்துக் களையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நிறைவேறிய தீர்மானங்கள்**

*3.2.1996* அன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், விவசாயச் சங்கத் தலைவர்கள், சமுதாய நல அமைப்பின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில், *6.2.1996* அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் டெல்லியில் தேசிய நீர் கொள்கையின்கீழ் தேசிய வழிகாட்டி விதிமுறைகளை National Policy Guidelinesஐ விவாதித்து முடிவு எடுப்பதற் காகக் கூட்டியுள்ள கூட்டத்தில் தமிழக அரசு எடுக்க வேண்டிய நிலை குறித்தும், தமிழக அரசு எடுத்துச் சொல்ல வேண்டிய

---

**நல்லதே செய்வோம்!**

**தன்னை** வெட்டும் கோடாரிக்கும் நறுமணம் தரும் சந்தன மரம் போன்றவனே மனிதன்.

**—துளசிதாஸ்**

---

நாம் பார்க்கும் உலகம் வேறு;
அறியப்படும் உலகம் வேறு.

—பிளேட்டோ

கடமைகளைச் சரிவர செய்யாமலே
உரிமைகளுக்காகப் போராடக் கூடாது.

—விநோபா

நமது சமூகத்தில் நிலவி வரும்
குறைபாடுகள் நீங்க வேண்டுமெனில், நாம்
எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வு
ஏற்பட வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

கருத்துக்களை ஒட்டியும், பங்கு பெற்ற அனைவராலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் :

1. மத்திய அரசு அனுப்பியுள்ள பன் மாநிலங்களின் நதி நீர்ப் பங்கீடு குறித்த, கொள்கை வழிகாட்டி விதிமுறைகள், அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும் இதரச் சட்டங்களுக்கும் முரண்பாடாகவும், எவ்வித அதிகாரமும் இன்றி இருப்பதால், இந்த வழிகாட்டி விதிமுறைகள் Guidelines நீதிமுறைக்கும், அம்முறையின்படி நடக்கும் நடுவர் மன்றக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் முரணானது என்றும் கருதுகிறது.

நடைமுறையிலும் இந்த வழிகாட்டி விதிமுறைகளை அமலாக்க இயலாது என்பதாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மத்திய திட்டக் குழுவும், கூறிய சீரான ஆலோசனைகளின்படி இந்த வழிகாட்டி விதிமுறைகளை விவாதித்து அங்கீகரிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்படுகிறது.

2. ஆண்டாண்டுக் காலமாக, தமிழகம் மரபுரிமைப்படி அனுபவித்து வந்த எந்த உரிமையையும் சிறிதளவுகூட சிதைக்காமல் பாதுகாக்க வேண்டும் என்றும், தற்போது பன் மாநில நதிநீர்த் தாவா சட்டத்தின்கீழ் சட்டபூர்வமாக நடைபெற்று வரும் நடுவர் மன்றங்களின் செயல்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும், அவற்றின் தீர்ப்புகளுக்கும் எந்தக் குந்தகமும் ஏற்படாத வண்ணம் மத்திய அரசு செயல்முறைகளைக் கையாண்டு, நீதியை நிலைநிறுத்தக் கடமைப்பட்டது என்றும் ஏற்கெனவே வழங்கப்பட்ட, தீர்ப்புகளுக்கு முரணாகவோ, புறம்பாகவோ, கருத்திலோ, செயல்முறையிலோ உத்தேசிக்கும் எந்த ஏற்பாட்டையும் தமிழகம் ஏற்காது என்றும் தீர்மானிக்கிறது.

3. 19.12.1995ந் தேதியிட்ட காவிரி நதிநீர் நடுவர் மன்ற ஆணைப்படி, தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய எஞ்சியுள்ள 5 டி.எம்.சி. நீரை உடனடியாகக் கர்நாடக அரசு திறந்துவிடுமாறு பாரதப் பிரதமர் உத்தரவிட வேண்டும் என்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

4. பெரியார் அணைக் கட்டின் நீரின் கொள்ளளவை 136 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்தத் தமிழக அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ள சூழ்நிலையில், கேரள அரசு மேற்குறிப்பிட்டவாறு நீரின் கொள்ளளவை அதிகரிக்க ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும், அதற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

5. 6.2.1996 அன்று டெல்லியில் நடைபெறும் மத்திய நீர்வளக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களை வலியுறுத்தி தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கருத்தாக எடுத்துரைத்து, இந்தத் தீர்மானத்திற்கு இசைய, நிலைமைக்குத் தக்க எல்லா நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுக்கவும், அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது என்றும் கேட்டுக் கொண்டு, இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)



அவர்கள் உறுதி செய்வார் என்பதை எதிர்நோக்கி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் முடிவை எதிர்ப்புடன் தமிழ்நாடு ஏற்றுக் கொண்டது. எஞ்சிய 5 டி.எம்.சி. நீரை இம்மாநிலத்திற்கு வழங்க கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு தற்போது தாக்கல் செய்துள்ளது. 1996 பிப்ரவரி 6 ஆம் நாள் புது டில்லியில் நடைபெற்ற தேசிய நீர் ஆதாரங்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் அவசர, உடனடித் தண்ணீர்த் தேவை நிறைவு செய்யப்படாத நிலையில், பன்மாநிலங்களிடையே செல்லுகின்ற ஆறுகளிலிருந்து கிடைக்கின்ற நீரை மாநிலங் களுக்குகிடையே பகிர்ந்தளிப்பது குறித்த வரைவுக் கொள்கை வழி காட்டிக் குறிப்புகள் பற்றி தற்போது விவாதிப்பது பயனற்றதாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார். நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, எஞ்சியுள்ள 5 டி.எம்.சி தண்ணீரைத் திறந்துவிட வேண்டியதன் அவசரத் தேவை குறித்து வலியுறுத்தினார். மேலும், 1991 டிசம்பர் 10 ஆம் நாளன்று, மத்திய அரசு, அரசிதழில் வெளியிட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை, உண்மையில் செயலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, 1956 ஆம் ஆண்டு பன்மாநில நீர்த் தகராறுகள் சட்டத்தின் 6A பிரிவில் கூறியுள்ளபடி, திட்டம் ஒன்றை உருவாக்கி, அத்திட்டம் செயல் படுத்தப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்புக் குழு மற்றும் செயலாக்கக் குழு ஆகியவற்றை அமைக்கும்படி மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தினார். கருநாடக அரசு தண்ணீர் விடாததால், இம்மாநிலத்தில் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த இழப்பு 10 இலட்சம் டன்னுக்கும் அதிகமாக இருக்கும். சட்ட விதிகளைப் பின்பற்றவும், அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளின்படி நிருவாகத்தைத் தங்குதடையின்றி செயல்படுத்தவும், உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் போன்ற உரியவாறு அமைக்கப்பட்ட தீர்ப்பு வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றின் உத்தரவுகளையும் ஆணைகளையும் அனைத்துத் தரப்பினர்களும் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றத்தின் ஆணைகளையும் கருநாடக அரசு ஏற்று நடக்க வேண்டும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு ஆற்றலும், விரைந்து செயல்படும் பாங்கும், ஆர்வமும், கண்ணோட்டமும், உலக அளவில் சென்னையை மிகப் பெரிய போட்டி விளையாட்டுக்குரிய இடமாக உயர்த்தியுள்ளது. ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டுப் போட்டி, பன்னாட்டு விளையாட்டுப் போட்டி ஆகியவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுகள், சென்னை மாநகரில் இதற்கு முன்னர் எப்போதுமே நடந்திராத பெரிய போட்டி விளையாட்டு விழாவாகும். இந்த விளையாட்டுகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்கள் 1995 டிசம்பர் 18 ஆம் நாள் தொடங்கி வைத்தார். மொத்தம் 7 "சார்க்" நாடுகளிலிருந்து வந்த

**உச்சநீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றத்தின் ஆணைகளையும் கருநாடக அரசு ஏற்று நடக்க வேண்டும்.**

**மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு ஆற்றலும், விரைந்து செயல்படும் பாங்கும், ஆர்வமும், கண்ணோட்டமும், உலக அளவில் சென்னையை மிகப் பெரிய போட்டி விளையாட்டுக்குரிய இடமாக உயர்த்தியுள்ளது.**

தொழில்நுட்பப் பிரதிநிதிகள் உட்பட 2500 விளையாட்டு வீரர்கள் 14 வகை போட்டி விளையாட்டுகளிலும், 2 செயல்முறை விளக்க விளையாட்டுகளிலும் பங்கேற்றனர். ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்துடன், மேலும் 5 புதிய விளையாட்டு அரங்கங்கள், அதாவது செயற்கைப் புல்தரை "ஹாக்கி" விளையாட்டு அரங்கம், செயற்கை மேற்பரப்பு உடைய டென்னிஸ் விளையாட்டு அரங்கம், நவீன நீச்சல் வளாகம், முற்றிலும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பலநோக்கு அகவிளையாட்டு அரங்கம், உலகத் தரத்தில் அமைந்த குறிபார்த்துச் சுடுவதற்குரிய களம் ஆகியவை மொத்தம் ரூ.58 கோடி செலவில் கட்டப்பட்டன. மேலும், ரூ.5 கோடி மதிப்புள்ள உயர்தர போட்டி விளையாட்டுச் சாதனங்கள் பல்வேறு போட்டி விளையாட்டு அரங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளும் கொண்ட விளையாட்டுக் கிராமம் ஒன்று ரூ.101 கோடி செலவில் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்த செயலூக்கத் திட்டம், இந்திய விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் 106 தங்கப் பதக்கங்களும், 60 வெள்ளிப் பதக்கங்களும், 19 வெண்கலப் பதக்கங்களும் வெல்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது. சென்னையில் போட்டி விளையாட்டுகளுக்காக உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை உருவாக்குவது, வருங்காலத்தில் பல முக்கியமான உலகப் போட்டி விளையாட்டுகள் நடைபெறுவதற்கு அனைவரும் விரும்பி ஏற்கும் ஓர் இடமாக சென்னை அமைவதோடு மட்டுமின்றி, தேசிய அளவிலும், உலக அளவிலும் சிறந்த சாதனை படைக்கும் பல போட்டி விளையாட்டு வீரர்களையும் உருவாக்கும் நிலைக்களனாகவும் அமையும்.

9. 1991-92 முதல், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதிஒதுக்கீட்டினை, பெருமளவில் தொடர்ந்து அதிகரிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை, சட்டப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். கடந்த 4 ஆண்டுகளில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகளை, திட்டங்களைச் செயலாக்குகையில் விஞ்சுவதற்கு மாநிலம் வகை செய்தது. இக்கால அளவில், இம்மாநிலத்தின் நபர் வாரியான திட்ட ஒதுக்கீடு, தேசிய சராசரி அளவைக் காட்டிலும் அதிகமாக்கப்பட்டது. சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இச்சாதனை இம்மாநிலத்தின் வளர்ச்சியில் இந்த அரசு கொண்டுள்ள கடமையுணர்வைக் காட்டுகிறது. பல பெரிய மாநிலங்கள் அவற்றின் முதற்கண் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் சரிவரச் செயலாக்க இயலாத நிலையில் இருக்க; இம்மாநிலத்தின் சாதனையை மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளது. 1991-92ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாக இருந்தது. 1992-93ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடியாக இருக்க, தமிழ்நாடு அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாக இருந்தது. 1993-94ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.2234.79 கோடியாக இருந்தது. 1994-95ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு, 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.2750 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், இம்மாநிலம் ரூ.2845.70 கோடி அளவிற்குத் திட்டச் சாதனை புரிந்துள்ளது. 1995-96 ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு

ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3250.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டை இம் மாநிலம் எய்தி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்குரிய, ஆண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்த அளவை முடிவு செய்வது குறித்து மத்தியத் திட்டக் குழுவோடு நடத்தப்படும் பேச்சு வார்த்தை இன்னும் முடிவுறவில்லை. 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டிற்குரிய அளவில் நிர்ணயிக்கப்பட்டாலுங்கூட, இம்மாநிலம், எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட பண வீக்கத்தைக் கணக்கில் கொள்ளாத ஒதுக்கீட்டு அளவான ரூ.10,200 கோடியை எளிதில் விஞ்சிவிடும் என்பதை, முதல் நான்கு ஆண்டுகளின் மாபெரும் சாதனை உறுதிப்படுத்துகிறது.

10. 1993-94, 1994-95 ஆம் ஆண்டுகளில் இருபது அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இம் மாநிலம், திட்ட இலக்குகள் அனைத்தையும் எய்துவதில் 100 சதவீத சாதனை படைத்துள்ளது. திட்டமிடல்-திட்டச் செயலாக்க மத்திய அமைச்சர், நமது மாநிலத்தின் சிறந்த சாதனையைப் பாராட்டியுள்ளார். 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதே அளவு சாதனை படைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11. இந்த அரசு பின்பற்றிய கொள்கைகள், கடந்த ஐந்து ஆண்டுகளில் இம்மாநிலம் சிறந்த பொருளாதாரச் சாதனை படைக்க வழிவகுத்தன. 1991-92 ல் 2.69 சதவீதம் ஆக மட்டுமே இருந்த நிகர மாநில தன் உற்பத்தி மதிப்பீடுகளின் ஆண்டு வளர்ச்சி வீதம், 1994-95 ல் 4.90 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் அமைப்பு ரீதியில் வரும் தொழில் துறையில் 1.59 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று மதிப்பிடப்பட்டது. அதாவது, ஒவ்வோராண்டும் சராசரியாக 32,000 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதாகும். இதில், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 1.29 இலட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்கெனவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 42,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். அமைப்பு ரீதியில் வரும் தொழில்களில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் பாதிக்கும் மேலானவை, தனியார் துறையில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதற்குக் காரணம், இந்த அரசு மேற்கொண்ட முதலீட்டாளருக்கு நேயமான தொழிற் கொள்கையாகும். மிகவும் குறிப்பிடத்தக்க மற்றொரு சாதனை, இம்மாநிலத்தின் ஊரக வறுமை நிலையின் ஒட்டுமொத்த அளவு வெகுவாகக் குறைந்துள்ளதாகும். இந்தியாவில் 1987-88 ஆம் ஆண்டில் சராசரியாக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 39.18 சதவீதம் ஆக இருக்க, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மக்களில் 45.8 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தனர் என்று, மத்திய திட்டக்குழு அமைத்த வல்லுநர் குழு, நாட்டு மாதிரி ஆய்வுப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கணக்கிட்டது. வல்லுநர் குழு வரையறுத்த முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 1993-94 ஆம் ஆண்டிற்குரிய, நாட்டு மாதிரி ஆய்வு தொடக்க விவரங்களின்படி இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களின் சராசரி விகிதாச்சாரம் 37.53 சதவீதம் என்றிருக்க, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சராசரி விகிதாச்சாரம் 32.64 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாடெங்கிலும் வறுமை நிலை ஓரளவே குறைந்துள்ள போதிலும், தமிழ்நாட்டில் வெகுவாக வறுமை நிலை குறைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஓர் சாதனையாகும்.

இம்மாநிலத்தில் வறுமை நிலையை மேலும் குறைக்கத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தக் குறிக்கோளை எய்த, பல்வேறு பொருளாதாரத் துறைகளில் அரசின் கொள்கைகள் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

12. பண வீக்கத்திலிருந்தும் பொருளாதாரச் சீரமைப்பு நடைமுறைகளின் கடுமையிலிருந்தும், ஏழை மக்களைக் காக்கும் பொருட்டு, பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைந்த நிலையிலேயே வைத்து வர வேண்டியதன் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய தன்னுடைய ஒவ்வொரு உரையிலும் வலியுறுத்தி வந்துள்ளார். குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதால் அரசுக்கு நிதிச் சுமை ரூ.600 கோடியாக அதிகரித்த போதிலும், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் பொது ரக அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- ஆக அரசு குறைத்துள்ளது. வறட்சி நிலை காரணமாக நெல் விளைச்சல் குறையுமென்பதால், அரிசியின் விலை வெகுவாக அதிகரிக்கக் கூடும். இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக, 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, திங்கள் தோறும், குடும்ப அட்டைதாரருக்கு 8 கிலோ அரிசி கூடுதலாக வழங்க, அரசு துணிகரமாக முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் கிடைக்கப் பெறும் அரிசியின் மொத்த அளவை அதிகரிக்கும் வண்ணம், அதிகரித்த தேவைக்குரிய அரிசியை ஏனைய மாநிலங்களிலிருந்தும், இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும் அரசு கொள்முதல் செய்யும். இதனால், அரசுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.70 கோடி செலவாகும்; அதாவது, நடப்பு ஆண்டிற்கு ரூ.210 கோடி செலவாகும். இருப்பினும், இது, பொதுமக்களின் அடிப்படைத் தேவையை முழுமையாக நிறைவு செய்யும் அரசின் உறுதியைத் தளர்த்தவில்லை.

13. மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் ஏற்பட்ட பாதகமான வறட்சி நிலை காரணமாகவும், கருநாடக அரசு காவிரியில் நீர் திறந்து விடாத காரணத்தாலும், 14 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையைச் சரி செய்யும் பொருட்டு, விதைகளையும், ஏனைய இடுபொருட்களையும் போதியளவு வழங்குவதற்கு உறுதி செய்வது உட்பட, சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. உணவுத் தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த இழப்பு, மாநிலம் கடந்த 4 ஆண்டுகளில் எய்திய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் ஓர் பின்னடைவாகும். 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் 74.94 இலட்சம் டன்னாக இருந்த உணவுத் தானிய உற்பத்தி 1994-95 ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன்னை எட்டியது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து 1994-95 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், நாட்டின் உணவு தானிய உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 5.5 சதவீதமாக இருந்தபோது இந்த வீதம் தமிழ்நாட்டில் 12.5 சதவீதமாக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டில் 57.82 இலட்சம் டன்னாயிருந்த அரிசி உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 78 இலட்சம் டன்னாக அதிகரித்தது. 1990-91 ஆம் ஆண்டில், சிறு தானியங்களின் உற்பத்தி 13.5 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1995-96 ஆம் ஆண்டில் 17.20 இலட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 3.59 இலட்சம் டன்னாயிருந்த பருப்பு வகைகளின் உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 5.20 இலட்சம் டன் என்ற அளவை அடைந்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.14 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1994-95 ஆம் ஆண்டில் 21.60 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில், கரும்பு உற்பத்தி,

எப்போதும் கண்டிராத அளவான 379.81 இலட்சம் டன் என்ற அளவை எட்டியது. மாநிலத்தின் வேளாண் கொள்கை, தரமான வேளாண் இடுபொருட்கள் கிடைக்கச் செய்வது, மண் வளம் மற்றும் விதை தொழில் நுட்பம், உரிய நேரத்தில் பாசனமளித்தல் போன்றவற்றிலும், விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கிணங்க, வேளாண் விளைபொருட்களின் விலை மற்றும் கொள்முதல் குறித்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக்குக் கிடைக்கப் பெறும் தரமான பாசன வசதி மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, மாநிலம், உலக வங்கியின் நிதியுதவியுடன், மொத்தம் ரூ.1240 கோடி செலவில், நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம், தற்போதுள்ள 18 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்களைச் சீரமைப்பதோடு, 9 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்கும் வழிவகை செய்யும். இத்திட்டத்தினால் மாநிலத்தில் பாசனம் பெறும் 16.68 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பயன்பெறும்.

14. தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் தனி மேம்பாடடைந்துள்ள மாநிலம் என்ற நிலையைப் பாதுகாக்கும் பொருட்டும், புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டும், அரசு, சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1992 ஜூன் திங்களில் புதிய தொழிற் கொள்கையை அறிவித்தார்கள். அது, தமிழ்நாட்டில் துரித, விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தவும், அடிப்படை வசதிகளைப் போதிய அளவுக்கு ஏற்படுத்தித் தரவும், மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. தொழில் உற்பத்தி வளர்ச்சி 1994–95 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அளவில் 8.4 சதவீதமாகயிருக்க, தமிழ்நாட்டின் தொழில் உற்பத்தி வளர்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது. 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து மாநிலத்தில் தொழில், எரிசக்தி துறைகளில் முதலீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.84,950 கோடியாகும். வெளிநாடுகளிலிருந்து விரும்பி வந்து முதலீடு செய்யும் ஓர் இடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. வெளிநாட்டு முதலீட்டு மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப் பெற்ற இசைவைப் பொறுத்த மட்டில், நம் நாட்டில் மூன்றாம் நிலையை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து, ரூ.2674.20 கோடி முதலீடு செய்யக்கூடிய 327 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

15. அரசு, 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் உயர் பெரு தொழில்களுக்கென, திருத்தியமைக்கப்பட்ட செயலூக்கத் திட்டத்தை அறிவித்துள்ளது. துணைத் தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும்

**பல பெரிய மாநிலங்கள் அவற்றின் முதற்கண் ஏற்பளிக்கப் பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் சரிவரச் செயலாக்க இயலாத நிலையில் இருக்க, இம்மாநிலத்தின் சாதனையை மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளது.**

**1993-94, 1994-95-ஆம் ஆண்டுகளில் இருபது அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இம் மாநிலம், திட்ட இலக்குகள் அனைத்தையும் எய்துவதில் 100 சதவிகித சாதனை படைத்துள்ளது.**

பெரிய அளவிலான தொழில்களை இங்கு அமைக்க இத்திட்டம் ஈர்க்கும். மாநிலத்தின் எந்தவொரு பகுதியிலும் ரூ.1500 கோடியும், அதற்கு மேம்பட்ட அளவிலான முதலீட்டுச் செலவில் அமைக்கப்படும் பெருந்தொழில்களுக்கு இச்செயலூக்கத் திட்ட உதவிகள் கிடைக்கப் பெறும். நம் நாட்டிற்குள்ளும், வெளி நாடுகளிலிருந்தும் தொழில் முன்னேற்ற முதலீடுதாரர்களின் தொழில் பிரிவுகளை ஈர்க்கும் வகையில், மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான தொழிற்பேட்டைகளையும், தொழிற் பூங்காக்களையும் அமைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு எடுத்து வருகின்றது. தற்போது, ஸ்ரீபெரும்புதூர் அருகில், மொத்தம் 1600 ஏக்கர் நிலப்பரப்பில், சென்னை தொழில் பூங்கா அமைக்கப்படும். கும்மிடிப்பூண்டியில், 211 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.20 கோடி செலவில், ஏற்றுமதி மேம்பாட்டு தொழில் பூங்கா அமைப்பது தொடர்பான பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கடலூர், கும்மிடிப்பூண்டி, ஓசூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள "சிப்காட்" தொழிற்பேட்டைகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் (TACID) வளர்ச்சி மையங்கள் அமைப்பது தொடர்பான செலவிற்குத் தன்னுடைய பங்குத் தொகையை வழங்க, அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் முன்வரவில்லை. இப்பணி தொடர்பாக ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்ய, மாநில அரசு ரூ.20 கோடி வழங்க இருக்கிறது. மேலும், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நிலக்கோட்டை தொழில் வளாகம், பர்கூர் தொழில் வளாகம், திருவள்ளூர் தொழில் வளாகம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகளையும் இராணிப்பேட்டை தொழில் வளாகத்தின் மூன்றாம் கட்டப் (phase - III) பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில், பல்வேறு இடங்களில் "சிட்கோ" நிறுவனம் 12 தொழிற் பேட்டைகளை உருவாக்கி வருகிறது. இது 28,400 பேருக்கு நேரடியாகவும் தொடர்புடைய ஏனைய வகையிலும் வேலை வாய்ப்பு அளிக்கும். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்திற்கும், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்திற்குமாக 2 தனியார் தொழிற் பேட்டைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

16. இம்மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ அத்தகைய தொழில் தொகுதிகளுக்குக் குறிப்பிட்ட கவனம் செலுத்துவது, ஒட்டுமொத்தத் தொழில் கொள்கைகளின் ஓர் முக்கிய அங்கமாகும். இதில், மோட்டார் வண்டித் தொழில், குறிப்பிடத்தக்க ஓர் துறையாகும். நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற நிலையைச் சென்னைக்கு மீண்டும் பெற்றுத் தருவதே அரசின் நோக்கமாகும். சென்னைக்கு அருகே, மறைமலைநகரில், ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் ஊர்திகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பாகத் திருவாளர்கள் மகேந்திரா ஃபோர்டு (இந்தியா) லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருப்பது, இந்நோக்கத்தை விரைவில் எய்துவதற்கு

வழி வகுக்கிறது என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உலகில் பெரிய அளவில் தலைசிறந்த கார் நிறுவனமாகத் திகழும், ஃபோர்டு மோட்டார் நிறுவனம், தன்னுடைய தயாரிப்புத் தொழில்பிரிவு ஒன்றை அமைக்க, தமிழ்நாட்டைத் தேர்தெடுத்திருப்பது, பெருமை சேர்க்கும் விஷயமாகும். மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்கள், துணைப் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது தொடர்பான பல துணைத் தொழிற்பிரிவுகள் அமைக்கப் பெறுவது உட்பட, கணிசமான பயன்களை இத்திட்டம் அளிக்கும். உலக அளவில் புகழ்பெற்ற ஏனைய கார் தயாரிப்பு நிறுவனங்களும், தங்களுடைய தொழிற்பிரிவுகளைத் தமிழ்நாட்டில் தொடங்க அக்கறை காட்டியுள்ளன.

17. ஏனைய துறைகளில் பெருந்திட்டங்கள் பல இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ.625 கோடி முதலீட்டில் திருவாளர்கள் தாபர் டுபாண்ட் நிறுவனத்தின் நைலான் இழை உற்பத்திப் பிரிவு, சென்னை அருகே கும்மிடிப்பூண்டியில் நிறுவப்படவுள்ளது. உற்பத்தித் திறனை இருமடங்காக்கக்கூடிய தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் முடிக்கப்பட்டு, வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட்டச் செலவுத் தொகையான ரூ.580 கோடியில் ஒரு பகுதி நிதியாக, தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம் பொதும்க்களிடமிருந்து பங்குத் தொகையை ஈட்டி ரூ.217 கோடி திரட்டியுள்ளது. இது, மாநில அரசுத் துறை நிறுவனம் ஒன்றின் தனித் தன்மை வாய்ந்த சாதனையாகும்.

18. நாட்டின் கடுமையான மின்தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கிட்டத்தட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் மின் வெட்டும் மின்பளு குறைவும் செய்யப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு இல்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போதுள்ள நிலைமை மிகவும் பாதகமாகவுள்ளது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புனல் மின் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் சேமிப்பு அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. தென் மின் தொகுப்பிலிருந்து ஆந்திரப் பிரதேசமும், கருநாடகமும் மின்சாரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கின்றன. சிங்கரேணி மற்றும் கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வரத்து தடையின்றி நடைபெறவில்லை. வரும் மாதங்களில் வீடுகளுக்கும், தொழில் மற்றும் வேளாண் துறைகளுக்கும் போதிய அளவில் மின்சாரம் வழங்க, தமிழ்நாடு மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை அதிகரிக்கவும், தேவையானால் இறக்குமதியின் வாயிலாக நிலக்கரியைப் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது 210 மெகாவாட் உற்பத்திப் பிரிவு, 1996 பிப்ரவரி இறுதியில் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 4 x 30 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பாலம் மின் உற்பத்தித் திட்டத்தின் நான்கு பிரிவுகளும் 1996 மார்ச்சுக்கு முன்னர் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். இதன் மூலம் வரும் கோடை மாதங்களில் போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்க உறுதி செய்யப்படும்.

19. எரி சக்தித் துறையில் மேம்பாடு காண்பதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. 1991 ஜூன் திங்களிலிருந்து உள்ள கால அளவில், இம்மாநிலத்தின் நிறுவு திறனில் 648.02 மெகாவாட் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. எட்டாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள் மேலும் 645.5 மெகாவாட் திறன் சேர்க்கப்படும். மாநில அரசு அதன் மூலம் உயரளவு மின் தேவையில் 45.54 சதவீத அதிகரிப்பைப் போதிய அளவு நிறைவு செய்ய இயன்றது. இனி

**தமிழ்நாடு, உடல் ஊன முற்றோரின் நலனுக்கென்று தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் ஆகும். உடல் ஊன முற்றோரின் நலனுக்கென்று தனியாக ஒரு துறை அமைக்கப் பட்டுள்ளது.**

வருங்காலங்களில் கடுமையான மின்பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யும் நோக்குடன், எரிசக்தி மேம்பாட்டிற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்றையும் இத்துடன் அரசு உருவாக்கியுள்ளது. மொத்தம் 10,650 மெகாவாட் மின் உற்பத்திக்காக 16 ஒப்பந்தங்கள் தனியார் மின் உற்பத்தியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளன. இதில், 5320 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 7 மின் திட்டங்கள், 3300 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 400 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய டீசலை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 10 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய புனல் மின் திட்டம் ஒன்றும், 100 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய கடல் நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும் அடங்கும். மீண்டும் மீண்டும் வேண்டுகோள்கள் விடுத்துங்கூட, தமிழ்நாட்டில் மின்துறையில் மேலும் மத்திய அரசின் முதலீடு இதுவரை செய்யப்படவில்லை. மொத்தம் ரூ.1590.58 கோடி செலவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் சுரங்கம் I-ன் விரிவாக்கத்தின் அடிப்படையிலான 2 X 210 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான தொழில்-பொருளாதார அனுமதி ஏற்கெனவே 1995 ஜூன் திங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. தேவையான நிருவாக அனுமதிகளை வழங்குமாறும், இத்திட்டத்தின் பணிகளை விரைந்து தொடங்குவதை உறுதி செய்யுமாறும் இந்திய அரசை, இவ்வரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

20. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மாநிலத்திலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறனளவு 434 மெகாவாட் ஆகும். காற்றாலை மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளது. இதுவரையில் மொத்தம் 415 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 1602 தனியார் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள் சேகரிக்கும் குப்பைக் கூளங்களிலிருந்து 5 மெகாவாட் மின் உற்பத்தியைப் பெறுவதற்குக் கூட்டுத் துறையில் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று சென்னையில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள், இரசாயனப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்பிரிவுகள் ஆகியவற்றில் மின் உற்பத்திப் பிரிவையும் அமைப்பது முழு அளவில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 3 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 29 மெகாவாட் திறன் கொண்ட மின்உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 10 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 171 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. சென்னை மாநகரம் அதன் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையிலிருந்து முழுமையாக மீள்வதை உறுதி செய்வது இவ்வரசின், நோக்கங்களுள் ஒன்றாகும். ரூ.1638 கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் புதிய

வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டத்தைத் தொடங்கி வைத்தது. வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விடுவதால் ஏற்படும் தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து, சீரமைக்கும். மேலும், கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரப்பெறும்போது, அதனைச் சுத்திகரித்து விநியோகிப்பதற்கான அடிப்படை வசதிகளுக்கு, நாம் உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிற மூன்றாவது சென்னை குடிநீர் வழங்கல்-துப்புரவு திட்டம் வகை செய்யும். தெலுங்கு கங்கைத் திட்டத்தின் வாயிலாக கிருஷ்ணா நதி நீர் சென்னையை அடையும் போது, மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், அவர்கள், மறைந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள், மறைந்த திரு என்.டி. ராமாராவ் அவர்கள் ஆகியோரது தொலைநோக்கு நிறைவேறும். தமிழ்நாடு, நீரைப் பெறத் தயாராகவுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும், காலதாமதமின்றி சென்னை மாநகருக்கு நீரை விட ஆந்திரப் பிரதேச அரசை வலியுறுத்துவதில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் என்னுடன் இணைந்து கேட்டுக் கொள்வார்கள்.

22. கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல் மற்றும் குடிநீர் வசதிகள், தெருவிளக்கு, சாலைகள், துப்புரவு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றிற்கு இவ்வரசு உயர்முக்கியத்துவம் அளித்துள்ளது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை இவ்வரசு தொடங்கி வைத்து 1992-93ல் வெற்றிகரமாக முடித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திலுள்ள 384 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.1 கோடி செலவிடப்பட்டது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்த குறிப்பிட்ட திட்டத்திற்கென்றில்லாது நிதியை வழங்க அதிகாரப் பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூ.384 கோடி செலவில் 1.97 இலட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இத்துடன், ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1991-92 லிருந்து மொத்தம் ரூ.140.97 கோடி செலவில் 1.80 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளில் 50 குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. 1996 மார்ச்சுக்குள் இக்குடியிருப்புகள் அனைத்துக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். மேலும், இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடியிருப்பும் குறைந்தது பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் ஒன்றையாவது பெற்றிருக்கும். கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கிராமப்பகுதிகளில் 50 குடும்பங்களுக்கு அதிகமான குடும்பங்களைக் கொண்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கிவைத்தது. இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள குடியிருப்புகளுக்கு 45,302 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்கள் ஆகியோருக்கு இலவசமாக சேலை-வேட்டிகள் வழங்கும் திட்டம், ஊரக கைத்தறிப்பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ரூ.76.29 கோடி செலவில் 72 இலட்சம் சேலைகளும்,68 இலட்சம் வேட்டிகளும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

23. மாசுக் கட்டுப்பாடு-சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு, இவ்வரசு மிக உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மாசுக்

கட்டுப்பாடு சுற்றுச் சூழல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் முறைப்படுத்தும் பணிகளுக்கு உதவும் வகையிலும், சுற்றுச் சூழல் துறை என்கிற புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1992 ஜூனில் ரியோ-டி-ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச் சூழல்-வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல்-21-ன் கீழ் மாநிலச் செயல்திட்டத்தை இத்துறை உருவாக்கி, செயல்படுத்தும். கழிவுநீர்ச் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிருவகித்து, பராமரிப்பதற்குரிய முழு பொறுப்புகளையும் அவற்றினால் பயனடையும் தொழிற்பிரிவுகள் ஏற்கும் என்கிற அடிப்படையில், கழிவு நீர் சுத்திகரிப்புக் கென்று பொதுவான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வடஆர்க்காடு-அம்பேத்கர், பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள தோல் பதனிடு தொழிற்சாலைகள், துணி, சாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து வெளிவருகிற கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கு இத்தகைய சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. ஆற்று நீர் மாசுக் கட்டுப்பாடு தேசிய செயல் திட்டத்தின் கீழ் ரூ.38.20 கோடி செலவில் காவிரி ஆற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.355 கோடி செலவில் சென்னை மாநகரின் நீர் வழிகளைச் சுத்தப்படுத்தவும், மேலும் தூய்மைக்கேடு ஏற்படாது தடுக்கவும் திட்டம் ஒன்று ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

24. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள மிகவும் குறிப்பிடத்தக்க சாதனை, மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தந்துள்ளது. மனித மேம்பாடு குறித்த ஆய்வுக் குறியீட்டில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தை அதாவது கேரளம், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்த நிலையைப் பெற்றுள்ளதை அண்மைய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. முக்கியமான சமூக நலத் துறைகளில் நிதிமுதலீட்டை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த அயராத முயற்சியினால் இச்சாதனையை அடைய முடிந்தது எனில் அதில் சிறிதும் ஐயமில்லை. மொத்தச் செலவின் சதவீதமாக சமூக நலத்துறைகள் குறித்த செலவினங்களைக் குறிப்பிடுகிற சமூக நலத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விகிதாச்சாரம் இம்மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 40 சதவீதத்திற்கும் மிகையாக இருந்து வந்துள்ளது. இக்கட்டான நிதிநிலை இருந்துங்கூட, நிலையான அடிப்படையில், சமூக நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் இந்த உயர் அளவு விகிதாச்சாரத்தை உறுதி செய்து, நாட்டிலேயே ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இக் கொள்கை மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரம் கிட்டும் வகையிலும் சமூகப் பதட்டங்களும் அமைதியின்மையும் அற்ற மாநிலமாக இம்மாநிலம் திகழும் வகையிலும் பெரும் பயன்களை அளித்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

25. பொருளாதாரத்தின் நிலைத் தன்மை பேணப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்கள் செயல்முறைப் படுத்தப்பட்ட காலம் முதற்கொண்டு, தமிழ்நாடு முனைப்புடன் மேற்கொண்ட கொள்கையை, மத்திய அரசு, முடிவில் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்த நடைமுறைகளின் பாதகமான விளைவுகளிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாப்பதற்காகச் சமூக நலன் சார்ந்த துறைகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறையாமல் பாதுகாத்து,முடிந்தால் உயர்த்தி, அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தேசிய வளர்ச்சிக்

குழுவின் பல கூட்டங்களில் பலமுறை வலியுறுத்தி உள்ளார். மத்திய அரசு, தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தையும், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தையும் அறிவித்ததன் மூலம், இது குறித்து வலியுறுத்தப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிகிறது. 1995 ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் தொடங்கப்பட்ட தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் பகுதியாயுள்ள கூறுகள் மூன்றும், அதாவது, முதியோர் உதவித் தொகை, மகப்பேறுகாலப் பயன், குடும்ப நல உதவி ஆகிய மூன்று திட்டங்களும், தமிழ்நாட்டில் ஏற்கெனவே பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் செயல்படுத்தப் பட்டுவரும் முதியோர் உதவித் தொகைத் திட்டம்,குடும்பத் துயர் தணிப்புத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கிழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை, தேசிய சமூக நிதி உதவித் திட்டத்தின் கிழ் இம்மாநிலத்தில் பயன்பெறுவோரின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமாகும். இதே போன்று, தமிழ்நாடு, முதியோர் நிதி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வழங்குகையில், தேசிய சமூகநிதி உதவித் திட்டம், மாதம் ஒன்றுக்கு ரூ.75/– மட்டுமே உதவித் தொகை வழங்குகிறது. மாநில அரசுகளின் சமூக நலத் திட்டச் செலவுகளுக்குத் துணை செய்யும் வகையில், தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் கிழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை மாநில அரசுகளுக்கு வழங்கும்படி, தமிழ்நாடு அரசு, மத்திய அரசை வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசு, மாவட்டக் கணக்குகளுக்கு நேரடியாக நிதி வழங்க முடிவு செய்துள்ளது. இது, நமது நாட்டைப் போன்ற கூட்டாட்சி அமைப்புடைய நாட்டில் மத்திய-மாநில நிதி உறவுகளில் இருக்க வேண்டிய நம்பிக்கைக்கு உகந்ததாக இல்லை. மேலும், நன்கு நிலைத்த சமூகப் பாதுகாப்பு முறை அமைந்துள்ள, தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தில், மத்திய அரசின் இதுபோன்ற நேரடித் தலையீடு, நிருவாக இடர்ப்பாடுகளையும் குழப்பத்தையும் மட்டுமே ஏற்படுத்தும். இவை தவிர்க்கத் தக்கவையாகும். இது குறித்து, மத்திய அரசு வகுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை மறுபரிசிலனை செய்யும்படி, இந்த அரசு, மீண்டும் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

26. தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சாதனையை, அதன் பிறப்பு-இறப்பு முதலிய சமுதாய நிலை புள்ளி விவர ஆய்வு காட்டுகிறது. கி. பி. 2010 ஆம் ஆண்டுக்கென்று வரையறுக்கப்பட்ட பிறப்பு–இறப்பு வீத தேசிய இலக்கை, தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். கி.பி 2010 ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 21 என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, தமிழ் நாட்டில் 1994–ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 19 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கி.பி. 2010 ஆம் ஆண்டிற்குள் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 9 என்கிற தேசிய இலக்கை எய்த வேண்டும் என்று கருதியிருக்க, தமிழ்நாட்டில் 1994–ல் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 7.9 ஆகும். குழந்தைகளின் சராசரி இறப்பு வீதம், தேசிய அளவில், உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 73 குழந்தைகள் என்றிருக்க, தமிழ்நாட்டில் 1994–ல் குழந்தைகள் இறப்பு வீதம் உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 59 என்றிருந்தது. டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சத் திட்டத்தில்

**அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்த முதல் மாநிலம் தமிழ்நாடே ஆகும். மகளிர் நலனைப் பாதுகாப்பதற்காக, மகளிர் மாநில ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

**"டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம்", குறிப்பாக பெண் சிசுக் கொலையை ஒழிப்பதையும், குடும்ப நலத் திட்டத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிலங்குகிறது.**

சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள் நலன் குறித்த விரிவான நல்வாழ்வுத் திட்டத்தின் மூலம், குழந்தைகள் இறப்பு வீதத்தை மேலும் குறைக்க, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். தேசிய குடும்பச் சுகாதார ஆய்வின்படி, தமிழ்நாட்டின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நாட்டின் பெரிய மாநிலங்களிலேயே மிகச் சிறந்தவை என ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு வரும் நோய்கள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த சாதனை எய்தியுள்ளதால், 1995–96 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்திற்கு மிகச் சிறந்த சாதனை எய்துவதற்கு இலக்கு ஏதும் நிர்ணயிக்க வேண்டியதில்லை என மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உண்மையில் சொல்லப்போனால், தமிழ்நாடு செயல்படுத்தும் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டங்கள், இந்நாட்டிலுள்ள பிற மாநிலங்களில், பின்பற்றப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கி.பி.2000 ஆண்டிற்குள் "அனைவருக்கும் நலவாழ்வு" என்கிற இலக்கை அடையும் நிலையில் இம்மாநிலம் உள்ளது.

27. 2000 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்குரிய இலக்கை, எய்த முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 33/1995) முனைப்புடன் அரசு செயலாக்கும். தமிழ்நாட்டில் பிறப்பு வீதம் குறைந்து வருவதால், தொடக்கக் கல்விக்காக புதிய பள்ளிகள் தொடங்குவதற்குப் பதிலாக, அனைத்துச் சிறார்களும் தற்போதுள்ள பள்ளிகளிலேயே சேர்க்கப்பட்டு, தொடர்ந்து பயில்வதை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பள்ளிப் பயிற்று முறையில் தரமான சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமாக மட்டுமே இதனை அடைய இயலும். குறைந்தளவுக் கற்றல் அடைவுகள் என்கிற அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டமும் பாடப் புத்தகங்களும் 1995–96 முதல் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆசிரியர்களுக்கு மும்முரப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. முதலாம் வகுப்பிற்குப் பாடம் நடத்துகின்ற 28,500 ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில், கல்வி நிலையில் பின்தங்கிய 4 மாவட்டங்களுக்கு மட்டுமென்று உலக வங்கி நிதி உதவியுடன் 1994–95–ல் தொடங்கப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், 1996–97–ல் மேலும் 3 மாவட்டங்களில் செயலாக்கப்படும். மேலும், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்த திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிக அதிக எண்ணிக்கையில் சிறார்களுக்குத் துணைச் சத்துணவு அளிக்க தமிழ்நாடு உறுதி செய்துள்ளது. உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகின்ற தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நலமேம்பாடு குறித்த ஒருங்கிணைந்த திட்டம் ஆகியவற்றால் அனைத்து மாவட்டங்களிலுள்ள சிறார்களும்

பயனடைகின்றனர். இம்மாநிலத்திலுள்ள, பிறந்தது முதல் 5 வயது வரையிலான சிறார்கள் அனைவரும், சிறார் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் துணைச் சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், 73.05 இலட்சம் பள்ளி செல்லும் சிறார்களுக்குச் சத்தான மதிய உணவு அளிக்கப்படுகிறது. "மகளிர் விழிப்புணர்வு திட்டம்-2000" என்கிற மகளிருக்குரிய விரிவான நலக் கொள்கை ஒன்றைத் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு செய்த முதல் மாநிலம் தமிழ்நாடே ஆகும். மகளிர் நலனைப் பாதுகாப்பதற்காக, மகளிர் மாநில ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரலில் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம்", குறிப்பாக பெண் சிசுக் கொலையை ஒழிப்பதையும், குடும்ப நலத் திட்டத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிலங்குகிறது. "தொட்டில் குழந்தைத் திட்டம்" என்பது பெண் சிசுக் கொலையைத் தடுக்கச் செயல்படுத்தப்பட்டுவரும் புது முறையிலான மற்றும் பரிவுணர்வு கொண்ட திட்டமாகும். தமிழ்நாடு, உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் ஆகும். உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோரின் நலனில் போதிய அக்கறை செலுத்தி, அவர்கள் சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக நடத்தப்படுவதற்குத் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

29. சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக ஆதி திராவிடர்களை மேம்பாடடையச் செய்யும் வண்ணம் அவர்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக அரசு அயராது முயன்றுவருகிறது. இவ்வரசு பதவியேற்றவுடன், ஆதி திராவிடர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தவும் 10 அம்சத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். 10 அம்சத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கு 1996 மார்ச்சு மாதத்திற்கு முன்னரே முழுமையாக எய்தப்பெறும். ஆதி திராவிடர் குடும்பங்கள் அனைத்துக்கும் வீட்டுமனைகளுக்கு வகை செய்வது உட்பட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது குறித்த திட்டத்தின் செயலாக்கத்தை உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து, ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு, இதுவரை மொத்தம் 8.40 இலட்சம் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1981-1991 ஆம் ஆண்டுக் கால அளவில் தமிழ்நாட்டில், ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட காங்கிரீட் தள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 96,801 ஆகும். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து, 1.27 இலட்சம் காங்கிரீட் தள வீடுகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 70,187 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் 1.50 இலட்சம் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 2.18 இலட்சம் ஆதி திராவிடர் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 3.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்காக, உதவி வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இதுவரையில் 4.14 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஒவ்வோர் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கும் இந்த அரசு தெரு விளக்கு வசதியும் குடிநீர் வசதியும் செய்துள்ளது. ஆதி திராவிடர்களின் பயனுக்காக மேலும் பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், ஆதி

திராவிடர் இனத்தைச் சேர்ந்த பல்வேறு பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஏனைய 26 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாநில ஆதி திராவிடர் நலக் குழு ஒன்று 1995 நவம்பர் திங்களில் அமைக்கப் பட்டுள்ளது. ஆதி திராவிடர் இன மக்களின் நன்மைக்காக கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி செயல்படுத்த இக்குழு உயர்நிலையில் விரிவான ஆலோசனைகளை வழங்கும். ஆதி திராவிடர் நலனுக்காக 9 உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. இக்குழு, ஆதி திராவிடர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து தனி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும். இக்குழு, இம்மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை விரிவாக ஆய்வு செய்து, அவர்களது நலனுக்குரிய பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

30. தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர்/பழங்குடியினர் (கல்வி நிலையங்களிலும், மாநில அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் பதவிகளிலும்இட ஒதுக்கீடு) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 45/1994) இயற்றி, இந்திய குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் விவர அட்டவணையில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ததன் மூலம், இந்த அரசு, தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாத்துள்ளது. இதனால், மாநிலத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. சமூகக் கட்டமைப்பு பதட்டமின்றி இருக்க இந்நடவடிக்கை பேருதவி புரிந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்குமாறு கோரி வரும் முறையீடுகளைப் பரிசீலிப்பதற்கென, நிரந்தரமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் ஒன்றையும் இவ்வரசு அமைத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம், மொத்தம் 29,083 நபர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீனவர் குடும்பங்களுக்கு இலவசமாக சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டமும் 1995-96 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.2.33 கோடி செலவில் 2.03 இலட்சம் மகளிரும், 2.07 இலட்சம் ஆண்களும் பயனடைவர்.

31. இவ்வரசு, பொறுப்பேற்றதிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலும், மாவட்டங்களில் மேற்கொள்கின்ற விரிவான சுற்றுப் பயணங்களின் போதும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அவற்றை உடனுக்குடன் போக்கி வருகிறார். பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிசெய்ய முதலமைச்சர் அலுவலகத்தில், இ.ஆ.ப. பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியின் தலைமையின் கீழ் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 15.98 இலட்சம் மனுக்கள் வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.531.36 கோடி மதிப்புள்ள உதவிகளை 8.03 இலட்சம் பேருக்கு நேரடியாக வழங்கியுள்ளார். வறுமை ஒழிப்பிற்குரிய பல்வேறு திட்டங்களின் பயன்கள் உண்மையில் ஏழை மக்களைச்

சென்றடைய இது உறுதி செய்துள்ளது. பொது மக்களின் இன்னல்களைக் களையும் நோக்குடன், இயற்கைச் சீற்றங்கள், கடுமையான நோய்கள், விபத்துக்கள் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட 3.32 இலட்சம் பேர்களுக்கு முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து ரூ.17.84 கோடி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

32. இம்மாநிலத்தில் திருக்கோயில்களின் நிருவாகத்தைச் சீரமைக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள சீரிய முயற்சிகளை அனைவரும் நன்கு அறிவர். தமிழ்நாடு திருக்கோயில்கள் நிருவாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முழுவதுமாகப் புதுப்பித்து திருப்பணி செய்ய, முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து 62 கோயில்களுக்கு, நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு மானியம், பணவசதி படைத்த கோயில்களின் உபரி நிதி, பொது நல நிதி ஆகியவையும் பல கோயில்களைப் புதுப்பிக்கும் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராம கோயில்களுக்குத் திருப்பணி செய்ய ரூ.1 கோடி மூல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருப்பணிக்குப் பிறகு, 605 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இது இதுவரையில் நடைபெறாத ஒன்றாகும். ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் முறையான பூஜை நடத்துவதற்கு நிதிவசதியில்லாத இம்மாநிலத்திலுள்ள அனைத்து கோயில்களுக்கும் அவற்றில் தினந்தோறும் ஒரு கால பூஜையாவது நடத்துவதற்கு உறுதிசெய்யும் வண்ணம் மூலநிதி ஏற்படுத்த நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. கோயில்களில் திருடுபோவதைத் தடுக்க கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் முதன் முறையாக திருச்சிராப்பள்ளிக்கு அருகில் 23.4 ஏக்கர் நிலப்பரப்பில் வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

33. தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பேணிக் காத்து வளர்ப்பதை இந்த அரசு தலையாய பொறுப்பாகக் கொண்டுள்ளது. தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில், 23 நாடுகளைச் சேர்ந்த 1101 அறிஞர்கள் கலந்து கொண்டனர். இது தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் செறிந்த வளத்தையும் புகழையும் எடுத்துக் காட்டியது. இம்மாநாடு தொடர்பாக, அடிப்படைவசதிகளை மேம்படுத்த பெருமளவில் முதலீடு செய்யப்பட்டு, தஞ்சாவூர், நவீன மாநகராக மாற்றப்பட்டுள்ளது. தமிழ் மொழியை வளர்க்க இந்த அரசு எடுத்துள்ள ஏனைய நடவடிக்கைகளில், தமிழ் வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தியதும், அரிய தமிழ் நூல்களை வெளியிடுவதற்கான ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டதும் அடங்கும். பேரறிஞர் அண்ணா அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அவருடைய துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு உரிமைத் தொகையாக ரூ.75 இலட்சம் அளிக்கப்பட்டது. கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

> **தேசிய குடும்பச் சுகாதார ஆய்வின்படி, தமிழ்நாட்டின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நாட்டின் பெரிய மாநிலங் களிலேயே மிகச் சிறந்தவை என ஏற்கெனவே அங்கீகரிக்கப் பட்டுள்ளன.**

**இக்கட்டான நிதிநிலை இருந்துங் கூட, நிலையான அடிப்படையில், சமூக நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் இந்த உயர் அளவு விகிதாச்சாரத்தை உறுதி செய்து நாட்டிலேயே ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கு கிறது.**

அவர்களின் படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு, உரிமைத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. தமிழ் பல்கலைக் கழகத்திற்கு மானியமாக ரூ.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

34. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், நாட்டின் பெரிய திரைப்படத் தொழில்களுள் ஒன்றாகும். அத்தொழில் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. நாட்டின் திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு வகிக்கும் முன்னணி இடத்தைப் பேணிப் பராமரிக்கவும், திரைப்படத் தொழிலில் பணியாற்றுவோரின் நலனுக்கு உதவவும் இவ்வரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உலக நாடுகள் தரத்திற்குச் சிறந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகளுடனும், உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு வசதிகள் பலவற்றை உள்ளடக்கியும், டாக்டர் ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் 1994 ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புச் செலவைக் குறைக்கவும், நல்ல தரமான திரைப்படங்கள் தயாரிப்பதை உறுதி செய்யவும், திரைப்பட கச்சா படச் சுருளுக்கு வரி குறைக்கப்பட்டது உட்பட திரைப்படத் தொழிலுக்காக பல்வேறு ஊக்கத் திட்டங்கள் வகை செய்யப்பட்டுள்ளன. திரைப்படத் தொழிலில் பணியாற்று வோரின் நலனுக்காக, வேளச்சேரி–பள்ளிக்கரணையில் 85 ஏக்கர் நிலம் அவர்களது வீட்டுவசதித் திட்டத்திற்காக இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலில் பணியாற்றும் 60 வயது அடைந்துள்ளவர்களுக்கு மாதம் ரூ.300/-ஒய்வூதியம் வழங்கும் ஒய்வூதியத் திட்டம் ஒன்றும், இறப்பு-இயலாமை நேரும்போது அவர்களுக்கு ரூ.50,000 வரை வழங்க காப்புறுதி திட்டம் ஒன்றும் 1995 ஏப்ரலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

35. அரசுத் திட்டங்கள் மூலம் வறியவர்கள் பயனடைவதை மேம்படுத்தும் வகையில், நிருவாகத் திறனை மேம்படுத்த, இந்த அரசு எண்ணற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் ஒன்றாக, அரசு அலுவலகங்களை எளிதில் அணுகவும், மேற்பார்வைப் பணியைத் தரமான முறையில் மேம்படுத்தவும், நடைமுறைக்கேற்ற வகையில் நிருவாக அதிகார வரம்புகள் சிரமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் உட்பட, பெரிய அளவிலான மாவட்டங்கள் ஏற்கெனவே சிரமைக்கப் பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 11 புதிய வட்டங்களும், 4 புதிய வருவாய்க் கோட்டங்களும் அமைக்கப் பட்டுள்ளன. விழுப்புரத்திலும், தஞ்சாவூரிலும் புதிய காவல் சரகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேனியில் புதிய காவல் மாவட்டம் அமைக்கப்பட்டு வருவதன் மூலம் மதுரை ஊரகக் காவல் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து புதிதாக 111 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து நிலைகளிலும் செயல் பாடுகள் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முயற்சியின் ஓர் அங்கமாக, ஒட்டு மொத்த மதிப்பூதியம் பெற்று வந்த 91,000 மதிய உணவுத் திட்டப் பணியாளர்களும் 28,000 கிராம உதவியாளர்களும் முறையான காலச் சம்பள ஏற்றமுறை அடிப்படையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். குற்றேவல் செய்வோர் என்று

பொருள் குறித்த பழங்காலந் தொட்டு இருந்து வந்த "தலையாரி", "வெட்டியான்" என்ற பதவிப் பெயர்கள், தற்போது ஒரே சீராக "கிராம உதவியாளர்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பழுக்கற்ற வகையில் 25 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர்களுக்கு ரூ.500/- மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரம் ஒன்றைப் பரிசாக வழங்கும் புதிய திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் புகார் மனுக்கள் குறித்து விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மக்களின் புகார் மனுக்களைப் பரிசீலிக்கும் பொறுப்பு வகிக்கும் தனித் துணை ஆட்சியர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

36. அனைத்து துறைகளிலும், உயர்தரம் வாய்ந்த நிருவாகச் சாதனைக்கு உறுதி செய்ய, இவ்வரசு முன்னுரிமை அளித்துள்ளது. பல்வேறு துறைகள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனை, தேசிய அளவிலான விருதுகள் அளிக்கப்பட்டதன் மூலம், அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலேயே சிறந்த தரம் வாய்ந்த பணிக்குப் பெயர் பெற்ற மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், 1994-95 ஆம் ஆண்டில் மட்டும் 5 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்கள் மொத்தம் 34 விருதுகளைப் பெற்றுள்ளன என்பது அவற்றின் தரமான சேவைக்குரிய நற்சான்றிதழாகத் திகழ்கிறது. இதே போன்று, சமூகநலத்துறை, புதுவாழ்வு அளிப்பதில் சிறந்த சாதனை புரிந்த தற்காக, 1994-95 ஆம் ஆண்டில், 16 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், இத்துறை 66 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. வேளாண்மைத்துறை, வானவாரி பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறந்த சாதனை புரிந்ததற்காக, 1994-95 ஆம் ஆண்டில், தேசிய விருது ஒன்றைப் பெற்றுள்ளது. இதே போன்று, 1995 ஆம் ஆண்டில் கொச்சியில் நடைபெற்ற மூன்றாம் உலக நறுமணப் பொருட்கள் குழும மாநாட்டில், தமிழ் நாடு, ஏற்றுமதி செய்யத்தக்க சிறந்த நறுமணப் பொருள் வகையை உற்பத்தி செய்ததற்காக, முதல் பரிசைப் பெற்றுள்ளது. வேளாண்மை, விரிவாக்கம், புன்செய்நில சாகுபடி, உயிரின கழிவு உர உற்பத்தி ஆகிய துறைகளில், இம்மாநிலம், தொடர்ந்து தேசிய உற்பத்தித்திறன் குழு விருதுகளைப் பெற்றுவந்துள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதிக்கூட்டமைப்பு புரிந்த சிறந்த சாதனையை அங்கீகரிக்கும் வண்ணம், அது, 1994-95 ஆம் ஆண்டில் இந்நாட்டில் சிறந்த முறையில் நிருவகிக்கப்படும் கூட்டுறவு வீட்டுவசதி தலைமை கூட்டமைப்பு என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஊரக வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் காட்டும் குறிப்பிட்ட அக்கறையைக் கருத்தில் கொண்டு, தேசியக் கூட்டுறவு வீட்டுவசதிக்கூட்டமைப்பு, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா விருது" என்ற விருதினை ஏற்படுத்தியுள்ளது. இந்த விருதினை தருமபுரிமாவட்டத்தில் உள்ள பாலக்கோடு வட்ட கூட்டுறவுவீட்டு வசதிச் சங்கம் பெற்றுள்ளது. தமிழ்நாடு கனிமவள நிறுவனம், (டாமின்), கருங்கற் பாளங்களை ஏற்றுமதி செய்துவருவதற்காக, தொடர்ந்து 6 வது ஆண்டாக, 1994-95 ஆம் ஆண்டில், சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது. காற்று விசைமின் உற்பத்தியில், இந்நாட்டில், சிறந்து விளங்கும் மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மத்தியஅரசு தேர்ந்தெடுத்துள்ளது.

37. ஜனநாயக ரீதியில் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுள்ளது. ஊராட்சித் தேர்தல்கள் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெறும் என்று இந்த அரசு அறிவித்து,

இதற்கான தேர்தல் அட்டவணை தயாரிக்கப்பட்டது. தேர்தல் தொடர்பான பொருட்களை வாங்குவது, தேர்தல் பணிக்கென பணியாளர்களை நியமிப்பது உட்பட அனைத்துத் தேர்தல் பணிகளையும் அரசு மேற்கொண்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெற வகைசெய்வதற்கான ஒரு நடவடிக்கையாக இம்மாமன்றம் இட ஒதுக்கீடுகளுக்கு வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தது. இருப்பினும், இடஒதுக்கீடு தொடர்பான இத் திட்டத்தை எதிர்த்து, உயர் நீதி மன்றத்தில் பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. இது தொடர்பாக,இறுதியான தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், தேர்தல் அறிவிக்கை எதனையும் வெளியிட வேண்டாம் என்று மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு உயர் நீதி மன்றம் ஆலோசனை நல்கியுள்ளது.

38. இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த அரசு, 1992 ஆம்ஆண்டு ஜூன் திங்களில் அறிவித்தது என்பதை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். உச்ச நீதி மன்றத்தில் பல வழக்குகள் நிலுவையாக இருந்தன தேர்தல்களை நடத்துவதற்குத் தடைவிதித்து சென்னை உயர் நீதி மன்றம் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஆணை பிறப்பித்தது. 1995 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உச்ச நீதி மன்றம் பிறப்பித்துள்ள கட்டளைகளின் அடிப்படையில், உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையாய் இருந்த பல ரிட் மனுக்கள் தொடர்பாக, உயர் நீதி மன்றத்தின் ஈராயம், மாநிலத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் 1996 ஆம் ஆண்டு மே திங்களின் இறுதிக்குள் நடத்தப்படவேண்டும் என்று கட்டளையிட்டு தீர்ப்பளித்துள்ளது. வரையறுக்கப்பட்ட இக்கால அளவிற்குள் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

39. கடந்த ஐந்து ஆண்டுகளில், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. சட்டம்-ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சி ஏற்பட வித்திட்டுள்ளது. இம்மாநிலத்தில் வேளாண் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. இந்த அரசின் கொள்கைகள், விரைவானதொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்துள்ளன. தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைந்துள்ளது. ஏழைகளில் மிக மிக வறிய ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேற்கொண்டும் மேம்படுத்த உறுதி செய்யும் வகையில், பல புதிய திட்டங்கள் தங்கு தடையின்றி செயல்படுத்தப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, நிலையான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை நடத்திச் சென்றுள்ளது என்று இங்கு குறிப்பிடுவது மிகை ஆகாது.

40. குறிப்பிடத்தக்க வகையிலான இச்சாதனை, விடா முயற்சிக்கும், கடின உழைப்பிற்கும் கிடைத்துள்ள வெற்றியாகும். இந்த அரசு எத்தனை இடர்ப்பாடான சூழலில் தன்னுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் நன்கறிவர். சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, நிதிப் பற்றாக்குறை, சமூக நல்லுறவுக்கும், சமூகக் கட்டமைப்புக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள், இம்மாநிலத்தின் உரிமைகளைப் பிறர் மீறி நடத்தல் ஆகிய ஒவ்வொரு வகையிலும் ஏற்பட்ட பாதகமான

சூழ்நிலைகளுக்கு மனஉறுதியுடன் எதிர்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளன. மாநிலத்தின் உரிமைகளை முழுவதுமாகப் பாதுகாக்கும் அதே நேரத்தில், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழவும் இந்த அரசு உறுதி செய்துள்ளது. தமிழ் நாடு பெருமிதம் கொள்ளத்தக்க அளவிற்கு முன்னேற்றப் பாதையில் செல்வது குறித்து, தேசிய அளவிலும், உலக அளவிலும் பாராட்டப் பெற்றுள்ளது. வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடிய தமிழ்நாட்டின் திறனை இருநாட்டு முகவரமைப்புகளும் பன்னாட்டு முகவரமைப்புகளும் அங்கிகரித்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் எழுச்சிமிகு தலைமை வெகுவாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும், இம்மாநிலம் நிலையான முன்னேற்றத்தையும், வளத்தையும் பெற்றுத் திகழும் என நான் உளமார நம்புகிறேன்.

41. இப்பேரவையின் விவாதங்கள், பொருள் பொதிந்தவையாகவும், சம நிலையுடையவையாகவும்; ஆக்கப்பூர்வமானவையாகவும் அமைந்து, மாநில மக்களின் நலனைத் தொடர்ந்து பேணிக் காப்பதில் கவனம் செலுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

வணக்கம். (14-2-1996)


தமிழரசு

மார்ச் 1 இதழ்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

■ கண்ணைக் கவரும் வண்ண முகப்பு

■ அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

■ மகத்தான மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

■ கரும்பு நிகர்க் கவிதைகள்

■ கருத்தைக் கவரும் கட்டுரைகள்

■ சுவையான துணுக்குகள்

■ பக்கத்துக்குப் பக்கம் படங்கள்

■ தமிழரசு - படிக்க - பயன்பெற - பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.95

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23











